Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY தேசிய தினசரி

போன்: 389 | தபாற பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம். பிலவ தை 12 ஆம் நாள் ஷஃபான் 18 | (25-1-62) | வியாழக்கிழமை | இதழ் 296

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

# வட, கிழக்கில் நவீன

## மீன்பிடி துறைகள் மீன்பிடி நிலையங்களும் அபிவிருத்தி செய்யப்படும்

### காணி அமைச்சின் திட்டம்

கொழும்பு, புதன்

**வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள இயற்கை மீன்பிடித் துறைமுகங்களையும் நிலையங்களையும் நவீன மாதிரித் துறைகளாகவும் நிலையங்களாகவும் அபிவிருத்தி செய்வதற்கு காணி அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சு ஒழுங்குகள் செய்துவருகின்றது.**

மாதிரி நவீன மீன்பிடித் துறைகளையும் நிலையங்களையும் அமைப்பதற்கு இப்பொழுதுள்ள மீன்பிடித்துறைகளையும் நிலையங்களையும் அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு காணி விவசாய நீர்ப்பாசன அமைச்சு நியமித்த பார்லிமெண்டரி உபகமிட்டி இத்திட்டம்பற்றி அமைச்சருக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள இயற்கை மீன்பிடித்துறைகளையும் நிலையங்களையும் நவீன மாதிரித்துறைகளாகவும் நிலையங்களாகவும் அபிவிருத்தி செய்யலாமென்று சிபார்சு செய்துள்ளது.

**புத்தளம் முதல் மன்னார் வரை**

"புத்தளத்திலிருந்து மன்னார் வரையுமுள்ள மீன்பிடித்துறைகள், நிலையங்கள் ஆகியவற்றிலும், கிழக்குமாகாணத்திலுள்ள மீன்பிடித்துறைகள் நிலையங்கள ஆகியவற்றிலும் மாதிரி நவீன மீன்பிடித்துறைகள், நிலையங்களாக அபிவிருத்தி செய்யக்கூடிய தகுதி வாய்ந்தவைகளை மீன்பிடி இலாகா டைரக்டர் தெரிவு செய்யவேண்டும். இப்பகுதிகளில் காணி அபிவிருத்திக் கமிஷனருடன் கலந்தாலோசித்து காணி அபிவிருத்திச் சட்டத்துக்கிணங்க, பர்மிட் முறைப்படி முடிக்குரிய காணிகள் வழங்கி மீன்பிடிச்சமூகம் ஸ்தாபிக்கவும் மீன்பிடி இலாகா டைரக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும் ஒரு ஏக்கர் காணிக்கு அதிகமாகவும் வழங்கப்படக் கூடாது" என்று பார்லிமெண்டரி உபகமிட்டி சிபார்சு செய்துள்ளது.

## ஜனவரி 5-ந்தேதி வேலைக்கு ஏன் வரவில்லை?

### அரசாங்க சேவைக் கமிஷன் ஊழியர்களை கேட்டுள்ளது

கொழும்பு, புதன்

ஜனவரி 5 ம் திகதி அடையாள வேலை நிறுத்தமன்று வேலைக்குச் செல்லாத அரசாங்க சேவையாளர்களை அதற்கு விளக்கம் தருமாறு அரசாங்க சேவைக் கமிஷன் கேட்டுள்ளது. ஜனவரி 5 ம்திகதியன்று முன்னறிவித்தல் எதுவுமின்றி வேலைக்குச் செல்லாத பல அரசாங்க சேவையாளர் தொடர்ந்து வேலைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அரசாங்க சேவைக் கமிஷனின் காரியதரிசி திரு. எஸ். ஜேவல்பித்தா, இலாகாத் தலைவர்களுக்கு அனுப்பிவைத்த அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

ஜனவரி 5-ம்திகதிவேலைக்குச் செல்லாத ஊழியர்கள் தத்தம் இலாகாத் தலைவர்களுக்கு விளக்கம் கூறவேண்டுமெனவும் ஒரு வாரகாலத்தில் அவர்களிடமிருந்து விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் அரசாங்க சேவைக் கமிஷனின் காரியதரிசி இலாகாத் தலைவர்களுக்குக் கூறியுள்ளார்.

ஜனவரி 31 ம் திகதிக்கிடையில் பிரஸ்தாப சேவையாளரது விளக்கங்களைத் தனக்கு அனுப்பிவைக்குமாறும் கமிஷன் இலாகாத் தலைவர்களைக் கேட்டுள்ளது. குறிக்கப்பட்ட திகதிக்கிடையில் விளக்கம் கொடுக்கத் தவறிய சேவையாளரின் பெயர் பட்டியல் ஒன்றையும் அனுப்பிவைக்குமாறு கமிஷன் கேட்டுள்ளது

அரசாங்க சேவைக் கமிஷன் அனுப்பிய அறிக்கைப் பிரதிகளை இலாகாத் தலைவர்கள் ஜனவரி 5-ம் திகதி வேலைக்குச் செல்லாத சேவையாளர்களுக்கு நேற்று அனுப்பியுள்ளனர்.

## ஆருயிரம் ஆயுர்வேத வைத்தியர்கள் பதிவு

கொழும்பு, புதன்

ஆயுர்வேத வைத்தியத் தொழில் செய்பவர்களாக ஆருயிரத்து நூற்றுப் பத்தொன்பது வைத்தியர்கள் சுதேசவைத்தியர்களாக்ப்பதிவு செய்யப்பட்டு விசேஷ 'கஸட்டில்' பிரசுரிக்கப்பட்டுள்ளது. சுதேச வைத்தியர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ள வைத்தியர்களின் வைத்திய சாட்சிப பத்திரங்கள் தான் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் என்று சுதேச வைத்தியகல்லூரி பதிவுக்காரியஸ்தர் திரு. ஜே. ஈ. பி. விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

பதிவு செய்யப்பட்டு 'கஸட்' பிரசுரத்தில் வெளியிடப்படாத எந்த ஒரு ஆயுர்வேத வைத்தியரின் வைத்திய சாட்சிப் பத்திரத்தை அரசாங்கஇலாகாக்களும் வர்த்தக ஸ்தாபனங்களும் இனி நிராகரிக்கலாம் என்று திரு. விக்கிரமசிங்கா கூறினர்.

நாட்டில் சுமார் 15,000 ஆயுர்வேத வைத்தியர்கள் இருப்பதாகவும் இபொழுது ஆருயிரம் வைத்தியர்கள் தான் பதிவு செய்யப்பட்டு முதல் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளதென்றும் அறிவிக்கப்பட்டுகிறது

குற்றவாளிகளுக்கு

## தீவிர தண்டனை வழங்கவே மரண தண்டனை திருத்தமசோதா

### அரசாங்க பார்லிமெண்டரிக்குழு அறிக்கை

கொழும்பு, வியாழன்

தேர்தல் காலங்களில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவும் காலம் சென்ற பிரதமரின் கொலைக்கு காரணமாக இருந்தவர்களுக்கு தீவிர தண்டனை வழங்கவுமே மரண தண்டனை திருத்த மசோதா. பார்லிமெண்டில் கொண்டு வரப்பட்டுள்ளது என அரசாங்க பார்லிமெண்டரிக் குழு நேற்று இரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கை மேலும் தெரிவித்துள்ளதாவது. குற்றவாளிகள் பிரிவிக்கவுன்சிலுக்கு அப்பீல் செய்வதைத் தடைசெய்வது அரசாங்கத்தின்நோக்கமல்ல ஏற்கெனவே ஒருவர் பிரிவிக்கவுன்சிலுக்கு அப்பீல் செய்துள்ளார்.

## பிரிவுக்கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்வதைத் தடுக்கவில்லை

### மரணதண்டனை மசோதாவுக்கு விளக்கம்

கொழும்பு புதன்

இலங்கை நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை ஆட்சேபித்து பிரிவுக் கவுன்சிலுக்கு அப்பீல் செய்யும் உரிமையை மரண தண்டனை (விசேஷ ஷரத்துக்கள்) மசோதா தடை செய்யவில்லை என்று அரசாங்க வட்டாரங்கள் இன்று கருத்துத் தெரிவித்தன.

அப்பீல் செய்ய அனுமதி மறுப்பது சம்பந்தமாக மசோதாவிலுள்ள விதிகள் உள்நாட்டில் அப்பீல் செய்வதைத் தான் தடை செய்கிறதேயன்றி பிரிவுக் கவுன்சிலுக்கு அப்பீல் செய்வதை தடை செய்யவில்லையென்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

## வீடமைப்பு கடன் வழங்க விசேஷ ஒழுங்கு

கொழும்பு, புதன்

அனுராதபுரத்தின் பழைய நகரததைப் புனித நகரமாகப் பிரகடனப்படுத்துவதற்காக பழைய நகரிலிருந்து வெளியேறும்படி உத்தரவிடப்பட்டவர்களுக்கு வீடமைப்புக்கடன் வழங்குவதற்கு விசேஷ ஒழுங்குகள் செய்யும்படி வீடமைப்புக் கமிஷனரை அரசாங்கம் கேட்டுள்ளது.

பழையநகரில் வசித்தவர்கள் வீடு கட்டிக்கொள்வதற்காக புனிதநகர் எல்லைக்கு வெளியில் முடிக்குரிய நிலம் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டதுடன் வீடுகள் கட்டிக்கொள்வதற்காக கடனும் வழங்கப்படும்.

---

## யாழ்ப்பாணம் கார்-பஸ்விபத்து சாரதி ரூ. 1000 பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், புதன்

இ. போ. ச. பஸ் சாரதி எஸ். தங்கவடிவேலுவையாழ்ப்பாணம் மாஜிஸ்ட்ரேட் திரு. அரசுவால்டன் ரூ. 1000 பிணையில் விடுவித்தார். அவர் ஓட்டிச் சென்றதாகக் கூறப்படும் இ. போ. ச. பஸ் ரூ. 2000 பிணையில் விடுவிக்கப்பட்டது. வருகிற 27-ந்திகதி விசாரணை நடத்தப்படும். சமீபத்தில் நடைபெற்ற கார் - பஸ் விபத்தின் காரணமாக சாரதிகைது செய்யப்பட்டிருந்தார்.

## கொழும்பில் இந்திய கலாசார கோஷ்டி

கொழும்பு, புதன்

இந்தியாவிலிருந்து 25 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு கலாசாரத் தூது கோஷ்டி இன்று இலங்கைவந்துள்ளது. இக்கோஷ்டியினர் நாட்டின்பல் வேறுநகரங்களில் நடனவிருந்தளிப்பர்.

---

கிரிக்கெட்

## எவருக்கும் வெற்றியில்லை

டாக்கா, ஜன. 24

இங்கிலாந்து கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கோஷ்டிக்குமிடையில் இங்கு நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் எவருக்கும் வெற்றியின்றி முடிவடைந்தது.

பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்சில் 7 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 393 ரன்கள் எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இரண்டாவது இன்னிங்சில் அது எல்லா விக்கட்டுகளையும் இழந்து 216 ரன்கள் எடுத்தது. இங்கிலாந்து தனது முதல் இன்னிங்சில் 439 ரன்களையும் இரண்டாவது இன்னிங்சில் ஆட்டநேர முடிவுவரை விக்கட்டு நஷ்டமின்றி 38 ரன்களையும் எடுத்தது,

# உங்கள் தினப்பலன்

—சோதிட ஆசான் செ. தெல்லியூர்

பிலவ ஆண்டு தைத்திங்கள் 12-ந் திகதி வியாழக்கிழமை (25-1-62) காலை 8-06 வரை சதுர்த்தி. பின்விரவு 5-10வரை உத்தரம். மரணயோகம். இன்று புதுமையாக எந்த விடயத்திலும் தலையிடவேண்டாம். தெய்வவழிபாடு நன்மை தரும். மாலையில் உல்லாசமாகப் பொழுதைக்கழிக்க உகந்ததது.

**இன்று பிறந்தவர்களுக்கு**

இத்தினத்தில் ஜனனமானவர்களுக்கு சுபசெயல்கள் பலவிதம் நடப்பதுடன் சிற்சில வேலைகளில் இலாபமற்ற முயற்சிகளில் சுணக்கம், செலவுகள், சச்சரவுகள் ஏற்படல் தேகநலம் பாதிக்கப்படல் ஆதியனவும் இருக்கும். செலவு அதிகரிப்பதின் மூலம் பணக்கஷ்டம் வளரும் ஆகவே செலவை மட்டுப்படுத்துவது அவசியம். கொள்வனவைக் குறைத்து, பண முடக்கல்களை யோசனையுடன் செய்து, நிதானமாக நடப்பது முக்கியமாமாகும். காணி வழக்குகளும் இடையிடை வரக்கூடும். உத்தியோகத்திலிருப்பவர்களுக்கு தமது நாவை அடக்கி வாழ்வது நன்மை தரும். பெண்களுக்கு காதல் விவாகப் பேறுகள், தொழில் வெற்றி, சந்தோஷ வாழ்வு ஆதியன காணப்படுகின்றனவாயினும் நிதானமும் பொறுமையும் இவர்களுக்கு வேண்டியது நல்லது.

**நட்சத்திர பலன்கள்**

அச்சுவினி:- குடும்ப சச்சரவு, கஷடம், அலைச்சல்.

பரணி:- மதிப்புயர்தல், நிம்மதி, பணவரவு.

கார்த்திகை:- கடும்உழைப்பு தேக நலக் குறைவு, மத்திம பலிதம்.

ரோகிணி:- தைரியம், சந்தோஷ கருமம் நடத்தல், சுபம்.

மிருகசீரிடம்:- சமூகத்தில் மதிப்பு, சுகம், தெய்வவழிபாடு.

திருவாதிரை:- முதியோர் பகை, கவலையீனம் கஷ்டம்.

புனர்பூசம்:- தைரியம், சமூகத்தில் மதிப்பு, சுகம்.

பூசம்:- ஊழியர் கஷ்டம், காரிய தாமதம், கஷ்டம்.

ஆயிலியம்:- பெரியோ தரிசனம், காரிய சித்தி, சுகம்.

மகம்:- அனுவசிய வழக்கு, பண நெருக்கடி, மனக்கவலை.

பூரம்:- இனசனக் கொண்டாட்டம், குடும்ப சந்தோஷம், சுகம்.

உத்தரம்:- உறவினர் கஷ்டம் தரல், குடும்ப கஷ்டம், அமைதியீனம்.

அத்தம்:- பெண்களால் நன்மை, குடும்பத்தில் அமைதி, சுகம்.

சித்திரை:- முதியோர் நட்பு, வித்தை மேன்மை, சுகம்.

சுவாதி:- தொழிலாளர் கஷ்டம் தரல், செய் காரிய நட்டம், துன்பும்.

விசாகம்:- உறவினர் கொண்டாட்டம், சந்தோஷம், சுகம்.

அனுஷம்:- பணக் கஷ்டம், தொழிற்றுமதம், கவலை.

கேட்டை:- தொழில் மதிப்பு, சமூக ஆதரவு, இலாயம்.

மூலம்: பொறுமையின்மை, பெரியோர் பகை, கவலை.

பூராடம்:- குடும்ப நலம், தெய்வ வழிபாடு, சுகம்.

உத்தராடம்:- அடக்ககுறைவு முதியோர் பகை, சஞ்சலம்.

திருவோணம்:-மனத்துணிவு, குழந்தைகளால் நன்மை, சுகம்.

அவிட்டம்:- தேகாரோக்கிய நலம், சுகபோசனம், நன்மை.

சதயம்:- ஊழியர் கஷ்டம், தொழிற்கேடு, யோசனை.

பூரட்டாதி:- பாக்கி வரவு, பணக் கஷ்டம் குறைதல், சுகம்.

உத்தரட்டாதி:- சிறியோர் தொல்லை, ஊக்கம் குறைவு, அமைதியின்மை.

ரேவதி:- பாக்கி வரவு, கடன் தொல்லை குறைதல், சுகம்.


## விற்பனைக்கு

ஆனைப்பந்தி குருநாத கோயிலுக்குத் தெற்குப் பக்கமாக நான்கு பரப்புடன் ஒருகல்வீடு விற்பனைக்குண்டு. விலை ரூபா 40000/- மேல், விபரம்: 145/4, பிரப்பங்குள ஒழுங்கை.

## விளம்பரம்

எட்டுக் கிரகங்களின் சேர்க்கையால் ஏற்படும் பலன்களை திட்டமாகவும், விளக்கமாகவும், தகுந்த ஆதாரங்களுடன், கணித முறையாக எழுதி அனுப்பப்படும். உங்கள் ஜாதகக் குறிப்புகளைத் தெசா புத்தியும் குறித்து, விரும்பிய தொகையைக் கட்டணமாகச் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

மு. சிவஞானம்
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் கீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள மருநது ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணனந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்

## தேவை

விட்டு வேலைகளில் அனுபவமுள்ள ஒருபெண் தேவை. நற்சாட்சிபபத்திரங்கள் முதலியவற்றுடன் விண்ணப்பிக்கவும். காரியதரிசிமேற்பார்த்து ஸ்ரீமதி விஸ்வலிங்கம், கூட்டுறவுவைத்தியசாலை, மூளாய்.

## கல்வி

தமிழ் மொழி மூலம் தபாலில் ஆங்கிலம், எழுத, வாசிக்க பேச, ஆறுமாதங்களில் கற்பிக்கப்படும் அத்துடன் ஜி. சி. ஈ. வகுப்பு (கலை–விஞ்ஞானம்) க்குரிய பாடங்களும் தபால் மூலம் கற்பிக்கப்படும் விபரங்களுக்கு 10 சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும் அதிபர். இன்ரநாசனல் இன்ஸ்ரியூட் 513. கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம்.


## பெற்றேர்- ஆசிரியர் சங்கத் தெரிவு

சுதுமலை, புதன்

சுதுமலை தவமணி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பெற்றேர் - ஆசிரியர் சங்கக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக் கிழமை திரு. சி. இராசதுரையின் தலைமையின்கீழ் நடைபெற்றது. அப்பொழுது புதுவருட உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவராக திரு. சி. இராசதுரையும், காரியதரிசியாக ஆசிரியர் மா. கந்தசாமியும், தனதிகாரியாக திரு. க திருச்செல்வமும் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் நிர்வாகக்குழுவில் ஆசிரியர்கள் எண்மரும் பெற்றேர்களில் ஐவரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## காணிக்கச்சேரி

முள்ளியவளை, புதன்

கிராம விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ், கெடுங்கேணி, தண்டுவரன் பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு, மேட்டு நிலமும் மானுவரி நெற்காணியும் வழங்குவதற்கான காணிக் கச்சேரி, 9-2-62ல் நெடுங்கேணி டி. ஆர். ஓ. கந்தோரிலும், தண்டுவான் கி. மு. ச. மண்டபத்திலும் நடைபெறவிருப்பதாக கணி வழங்கும் உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

## இலங்கை–இந்திய விமான சர்வீஸ் ஒப்பந்தம்

சென்னை, ஜன. 24

"ஏயர் சிலோன் ஸ்தாபனத்துக்கும், இந்தியன் ஏர்லைன்ஸ் ஸ்தாபனத்துக்குமிடையே இன்னும் 2 வாரங்களில் விமானசேவை ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படு" என ஏயர் சிலோன் அதிபர் இங்கு கூறினர்.

## இடமாற்றங்கள்

முள்ளியவளை, புதன்

பதவியனால் வனஉத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. பி. எஸ். அல்பிரட் ஓட்டுசுட்டான் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

திருமலை டிஸ்டிரிக்கோட் ாரியதரிசி திரு எஸ். கந்தையா, கண்டி பொலிஸ் காரியாலயத்துக்கு தலைமை லிகிதராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரது இடத்துக்கு, திருமலையில் மேலதிக பிரதி பிஸ்காலாகக் கடமையாற்றிய திரு. பி. பாக்கியநாதன் நியமனம் பெற்றுள்ளார்.

## 1962-ம் ஆண்டு பாடசாலை மான்யம்

உடுப்பிட்டி, புதன்

பாடசாலைகளுக்கென வழங்கப்படும் மான்யம் இவ்வாண்டு எவ்வெக் காரணங்களுக்குச் செலவு செய்யப்படலாமென வடபிரதேச உதவி வித்தியாதிகாரியின் சுற்றறிக்கையொன்று கூறுகிறது.

ஆங்கிலப்பாடசாலைகள் தத்தமக்கு வேண்டிய செலவுகள் பற்றிய பட்டியல் ஒன்றைத் தயாரித்து, அவை ரூபா 500க்கு மேற்பட்டால் கல்விக்கந்தோருக்கு இருமாதங்களுக்கு ஒரு தடவை அனுப்ப வேண்டும்.

தமிழ், சிங்களப் பாடசாலைகளும் ரூபா. நூற்றுக்கு மேற்பட்ட செலவினங்கள் இருப்பின் அவற்றைக் கல்விக்கந்தேரின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

இச் செலவினங்களுக்குரிய பற்றுச் சீட்டுகளும் உடனுக்குடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## பட்டினசபை மாதாந்தக் கூட்டம்

மாவிட்டபுரம் செவ்வாய்

காங்கேசன்துறை பட்டின சபையின் மாதாந்தக் கூட்டம் அதன் தலைவர் திரு. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

காங்கேசன்துறைப் பகுதிக்கென ஒரு பெண்கள் பாடசாலை இல்லாமையால் மாணவிகள் பல இன்னல்களுக்கு உள்ளாகிருர்கள். இக்குறையை நிவர்த்திசெய்ய காங்கேசன்துறைப் பகுதிக்கென ஒரு பெண் பாடசாலையை விரைவில் அமைக்கும்படி கல்விமந்திரியைக் கேட்டுக்கொள்ளும் ஓர் தீர்மானம் திரு. எஸ. சிவனடியாரால் பிரேரிக்கப்பட்டு திரு இமானுவேலால் ஆமோதிக்கபபட்டது. இத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

காங்கேசன்துறைப் பட்டின சபை பகுதிக்குள் இறைச்சிக்காக பசுக்கள் கொலைசெய்யப்படுவதைத் தடுக்கும் மற்றேர் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இலங்கையில் உள்ள புராதன புண்ணிய ஸ்தலமான கீரிமலையில் மது மாமிசம் உபயோகித்து அதன் மகிமையை சிலர் குறைப்பதால் இவ்விதச்செயலைத் தடைசெய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படி அப்புண்ணிய ஸ்தலத்தை பரிபாலிக்கும் தெல்லிப்பழை கிராமச்சங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் மற்றேர் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

# தேர்தலில் பாம்புகள் பலவகை!

## ஒளி விளக்கப் பலகைகள்

இப் பொதுத் தேர்தலில் மாநிலத் தலைநகரங்களில் வாக்கு எண்ணிக்கையைக் காட்டும் ஒளிப் பலகைகளை வைக்க தேர்தல் ஆணையாளர் திட்டமிட்டுவருவதாகத் தெரிகிறது. பத்திரிகைச் செய்தி அலுவலகங்களில் இத்தகைய பலகைகள் வைக்கப்படும் என்று தெரிகிறது. கேரளத்தில் நடைபெற்ற இடைத்தேர்தலில் ஒளி அறிவிப்பு முறை வெற்றிபெற்றது. இப்பொழுதும் அம்முறையைக் கையாளத் தூண்டியிருப்பதாகத் தெரிகிறது.

## தபால் மூலம் வாக்கு

தபால்மூலம் வாக்களிக்கவும் இத்தேர்தலில் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. வாக்குச் சாவடியில் சென்று நேரடியாக வாக்குப் பதிவுசெய்ய முடியாத நிலையில் வெளியூர்களிலிருக்கும் வாக்காளர்களுக்காக 'தபால் வாக்கு" என்று இந்த முறை புகுத்தப்பட்டுள்ளது. தபால் மூலமாக வாக்களிப்பவர்களை ஐந்துவகையினராகப் பிரிக்கலாம். முதல் வகையினர், "செர்விஸ" வாக்காளர்கள். அதாவது போர்ப்படைகளிலும், வெளிநாடுகளில் இந்திய ஸதானிகராலயங்களிலும் பணியாற்றுபவர்கள். இரண்டாவதாக, ராஷ்டிரபதி, உப-ராஷ்டிரபதி, கவர்னர், லோகசபை சபாநாயகர், உப்சபாநாயகர், ராஜ்யசபை உபஅக்கிராசினர், மத்திய, ராஜ்ய மந்திரி சபைகளைச் சேர்ந்த மந்திரிகள் ஆகிய விசேஷ வாக்காளர்கள். மூன்ருவது வகையினர் இவர்களுடைய மனைவிமார்கள். நான்காவதாகத் தேர்தல் பொறுப்புக்களில் நியமிக்கப்பட்டிருப்பவர்களுக்கும் இந்த வசதி கிடைக்கும். தடுப்புக்காவல் கைதிகளாக இருக்கும் வாக்காளர்களும் தபால்மூலம் வாக்களிக்கலாம்.

## சிவாஜி கணேசன் அறிக்கை

சுதந்திரக் கட்சித் தலைவர் ராஜாஜிக்கு தேர்தல் நிதியாக ரூபா 20 ஆயிரம் கொடுக்க சிவாஜி கணேசன் முடிவுசெய்திருப்பதுபற்றி எழுந்துள்ள சந்தேகத்திற்கு சிவாஜி கணேசனே பதிலளிக்கிருர். "தமிழ் நாட்டிலுள்ள எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் நான் மதிக்கிறேன். அவர்கள் ஏதாவது என்னிடம் எதிர்பார்த்தால் அதை எனக்குக் கிடைத்த பெரும் மதிப்பாகக் கருதுகிறேன். காங்கிரஸ் கட்சி மாநாட்டிலும், ஈ. வெ. ரா. பெரியார்

# தமிழகமும் பொதுத்தேர்தலும்

மாநாட்டிலும், கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டிலும் நான் நாடகம் நடத்தி, நிதி திரட்டிக் கொடுக்கப்போகிறேன். இதேமுறையில்தான், ராஜாஜிக்கும் ரூபா 20 ஆயிரம் கொடுக்க முடிவுசெய்திருக்கிறேன். இதைத்தவிர எனக்கு கட்சி நோக்கமே கிடையாது. நான் கலைஞன்."

## அபேட்சை மனுக்கள் பரிசீலனை

பொதுத்தேர்தலில் போட்டியிட மனுச்செய்த அபேட்சகர்களின் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டுவிட்டன. கோவை மாவட்டத்தில் காங்கிரஸ் சார்பில் மாற்று அபேட்சகராக மனுத்தாக்கல் செய்திருந்த திரு. வி. என். ராமசாமியின் பெயர் வாக்காளர் பட்டியலில் இல்லாதபடியால் தள்ளுபடி செய்யப்பட்டது. இதே காரணத்திற்காக நம்பியூர் தொகுதியில் போட்டியிடும் சுயேச்சையாளர் திரு. மாரப்பகவுண்டரின் மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களுக்கு 25 வயதாகியிருக்கவேண்டும் விதிக்கமைய வயது நிரம்பாத் தி. மு. க. சார்பில் உட்பிலியாபுரம் சட்டசபைத் தொகுதியில் மனுச்செய்திருந்த திரு. ஆர். கே. துரைராஜ் மனுத்தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனல் தி. மு. க. மாற்று அபேட்சகரான திரு. பெத்துரெட்டியாரின் மனு இத்தொகுதிக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சுதந்திராக்கட்சி அபேட்சகராக வேலூர் தொகுதிக்கு மனுச்செய்திருந்த சுதந்திராக்கட்சியைச் சேர்ந்த அபேட்சகர் திரு. ஜி. பி. கிருஷ்ணன் மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. நடிகர் ராஜேந்திரனது அபேட்சை மனுவிலும் அவரது அப்பாவின் பெயரில் மாறுதல் இருப்பதாக ஆட்சேபனை கிளப்பப்பட்டது. ஆனல் அதற்கு ஆதாரம் இல்லையென்று ஆட்சேப மனு தள்ளுபடி செய்யப்பட்டது. பெரும்பூர் தொகுதியில் போட்டியிடும் தி. மு. க. திருமதி சத்தியவாணிமுத்து காங்கிரஸ சுலோசனவுக்கு எதிராக கிளப்பிய ஆட்சேபனையும் தள்ளுபடி செய்யப்பட்டது.

## அபேட்சை மனு வாபஸ்

இத்தேர்தலில் அபேட்சை மனு வாபஸ பெறும் இறுதித் திகதி இன்ருகும். சில அபேட்சகர்கள் இரு தொகுதிகளிலும் சிலர் கட்சிகளால் மாற்று அபேட்சகர்களாகவும் அபேட்சை மனு தாக்கல் செய்துள்ளனர். அபேட்சை வாபஸாவதைப் பொறுத்து தேர்தல் நிலைமையில் இன்னும் சில மாறுதல்கள் ஏற்படலாம்.

## தேர்தலில் பாம்புகள்

"சுதந்திராக்கட்சி தண்ணீர்ப்பாம்பு போன்றது; இது ஆட்களைக் கடிக்காது; கடித்தாலும் விஷம் ஏருது; கொஞ்சம் சுண்ணும்பு வைத்தால் போதும்; கம்யூனிஸ்ட் கட்சி நல்ல பாம்பு போன்றது. இந்தப் பாம்பைக்கண்டு எல்லோரும் பயப்படுவார்கள்; கொடிய விஷம் உள்ளது இந்தப் பாம்பு. தி. மு. க. கட்டுவிரியன் பாம்பு போன்றது. பாம்புகளில் மிகப்பயங்கரமான பாம்பு இதுதான். கடித்தால் ஆளைச் சுடுகாட்டுக்கு அனுப்பாமல் விடாது. ஆகவே மக்களுக்குத் தீங்குதரும் இந்தப்பாம்பை, தடியால் அடித்துக் கொல்லவேண்டும்" என்று அமைச்சர் திரு. மாணிக்கவேலர் கூறியிருக்கிருர்.

# இன ஒதுக்கல் பற்றி எதிர்க்கட்சி தலைவரின் கண்டனம்

## தென்னுபிரிக்க பார்லிமெண்டில் பேச்சு

### உலக அரங்கில் சோதனை ஏற்பட்டுள்ளது என்கிருர்

கேப்டவுண், ஜன. 24

**தென்னுபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையின் விளைவுகள்பற்றி மக்களுக்குத் தெரிவிக்க அரசாங்கத்திற்குத் துணிச்சல் இல்லை என அந்நாட்டு பார்லிமெண்டில் எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டினுர்.**

"காமன்வெல்த்தி லிருந்து வெளியேற நேர்ந்ததற்கு தென்னுபிரிக்காவின் கொள்கையே காரணம். இன ஒதுக்கலினுல் ஐ. நா. விலும் இந்நாட்டுக்குச் சங்கடமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பொதுவாக உலக அரங்கில் தென்னுபிரிக்காவுக்குச் சோதனைக்காலம்" என்றும் அவர் கூறினுர்.

ரஷ்யா, சீன, இந்தியா உட்பட 15 நாடுகள் தென்னுபிரிக்கப்பண்டங்களைப்புறக்கணித்து வருவதாயும் அறிவிக்கப்பட்டது.

# 40 வீரரைக் கொன்ற இந்திய கூர்க்க வீரர்

### "பரம்வீர்" சக்கரம் வழங்கப்பட்டது

புதுடில்லி, ஜன. 24

**காங்கோவில் தீரமுடன் போராடி வீரமரணம் எய்திய இந்திய ராணுவத்தின் கூர்க்க துப்பாக்கிப் படையைச் சேர்ந்த காப்டன் குர்மாத்சிங் சஹாலியாவுக்கு ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திரபிரஸாத் "பரம் வீர்" சக்கரம் வழங்கியிருக்கிருர்.**

காப்டன் சஹாலியா கூர்க்கர்களின் இயல்புக் கேற்ப அசாதாரணமான வீரம்காட்டி உயிர் நீத்தார். எலிஸபெத்வில்லியில் கடாங்கா வீரர்களின் ரஸ்தாத்தடை ஒன்றை அகற்றும் வேலையில் ஒரு சிலரை மட்டும் கொண்டு காப்டன் சஹாலியா இறங்கினுர். ஆனல் எதிரிகள் மிக அதிகமாக, அதாவது 90 பேர் இருந்தனர். சஹாலியா அவர்களில் 40 பேர்களைக் கொன்ருர். பகைவரின் குண்டுகள் அவரது கழுத்தில் வந்து விழுந்தவண்ணம் இருந்ததால் இரத்தம் கொட்டிய வண்ணமே இருந்தது. பல குண்டுகள் ஒன்றன்பின் ஒன்ருக அவரது கழுத்தில் தாக்கி தொடர்ந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்த போதிலும் அதைப் பொருட்படுத்தாது அவர் தொடர்ந்து சண்டையிட்டார். கடைசியில் கழுத்து அடியோடு துளைக்கப்பட்டுத் துவண்டு விழுந்தார் சஹாலியா.

இதே போல் வேறு இரு போராட்டங்களில் வீரமரணம் எய்திய மற்றும் இரு கூர்க்க வீரர்களுக்கும் அசோகசக்கரம் வழங்கப்பட்டுள்ளது. வருகிற 26-ம் தேதி சுதந்திர தினத்தன்று இதற்கான விருதுகள் ராஷ்டிரபதியால் வழங்கப்படும்.

# பால் பவுடர் உபயோகத்தை நிறுத்த சென்னை உத்தரவு

### பாடசாலை குழந்தைகள் பலியானதன் எதிரொலி

சென்னை, ஜன. 24

தமிழ் நாட்டில் 'கெயர்' பால் பவுடர் உபயோகத்தை சகல இடங்களிலும் நிறுத்துமாறு சென்னை அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

திருநெல்வேலியில் ஒரு பாடசாலையில் இந்தப் பால்பவுடரினுல் தயாரிக்கப்பட்ட தயிரை உண்ட 40 பாடசாலைக் குழந்தைகள் நோயுற்றனர். 3 குழந்தைகளுக்கு மரணம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்தே அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறது. சம்பவம்பற்றி விசாரணை நடத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

---

## டென்மார்க் பிரதமர்

பங்களுர், ஜன. 24

டென்மார்க் பிரதமர் பங்களுர் வந்து சேர்ந்தார். இன்று மைசூர் செல்லும் அவர் நாளை சென்னைக்குப் புறப்படுவார்.

## காரினுல் மோதி மரணம் விளைவித்ததாய் வழக்கு

சாவகச்சேரி, புதன்

பளையைச்சேர்ந்த தாமோதர் கோவிந்தபிள்ளை என்பவரை யர்ழ்ப்பாணம்-கண்டி வீதியில் வைத்து காரினுல் மோதி மரணம் விளைவித்ததாகச் சில்லாலையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை மீது குற்றஞ்சாட்டிச் சாவகச்சேரிப் பொலிஸார் தொடர்ந்தவழக்கு சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

விசாரணை முடிவில் நீதிபதி எதிரியைக் குற்றவாளி இல்லை எனக் கண்டு விடுதலை செய்தார்.

## அங்கோலாபற்றி இந்தியா தீர்மானம்

நியூயோர்க், ஜன 24

அங்கோலாவிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கும் வகையில் அங்கு சுயேச்சையான தேர்தலை நடத்த அரசியல் ஸ்தாபனங்களை ஏற்படுத்துமாறு போர்ச்சுக்கலைக்கேட்டுக்கொள்ளும் ஒரு தீர்மானத்தை இந்தியா உட்பட 40 ஆசிய ஆபிரிக்க நாடுகள் கொண்டுவந்திருக்கின்றன.

---

## பர்மிய ராணுவ கோஷ்டி இந்தியா வருகிறது

புதுடில்லி, ஜன 24

பர்மாவின் முப்படைகளையும் சேர்ந்த 17 அதிகாரிகளின் தூதுகோஷ்டி ஒன்று இந்தியா வரவிருக்கிறது.

---

## காஷ்மீர் தீர்ப்புக்கு கென்னடி முயற்சி

வாஷிங்டன், ஜன. 24

காஷ்மீர் சம்பந்தமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஒரு சமரசம் செய்துவைக்குமுகமாக இரு நாடுகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவரை நியமிக்க ஜனதிபதி கென்னடி முன்வந்திருக்கிருர். இதுசம்பந்தமாக அவர் பாகிஸ்தான் அதிபர் அயூப் கானுக்கும் பிரதமர் நேருவுக்கும் கடிதம் எழுதியுள்ளார்.

## ஸ்ரீமதி டிராவஸ்கி காலமானுர்

பாரிஸ், ஜன. 24

ரஷ்ய புரட்சித் தலைவர் டிராவ்ஸ்கியின் மனைவி நேற்று பாரிசில் காலமானுர். அவருக்கு வயது 79.

## ஹாலந்தில் இலங்கைத் தூதர்

ஹேக், ஜன. 24

ஹாலந்தில் இலங்கை ஸ்தானிகராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. பி. எப். பெரேரா தமது நியமனப் பத்திரங்களை ராணி ஜூலியானுவிடம் நேற்றுச் சமர்ப்பித்தார்.

---

## ஷோம்பே-வெலன்ஸ்கி சந்திப்பு!

லண்டன், ஜன. 24

வடரொடீஷியப் பிரதமர் சர். ராய் வெலன்ஸ்கியும் கடாங்கா அதிபர் ஷோம்பேயும் ஸாலிஸ்பரியில் சந்தித்ததாக ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. இதுவரை இச்செய்தி இரகசியமாக வைக்கப்பட்டிருந்ததாய் கூறப்படுகிறது.

---

## பாகிஸ்தான் முன்னேற்றம்பற்றி திரு. இலங்கரத்ன

ராவல்பிண்டி, ஜன. 24

பாகிஸ்தான் அடைந்திருக்கும் கைத்தொழில் முன்னேற்றம் நமக்கு மகிழ்ச்சியை அளித்திருக்கிறதென்று இங்கு வந்துள்ள இலங்கை வர்த்தகத் தூதுகோஷ்டித் தலைவர் திரு. டி. பி. இலங்கரத்ன நிருபர்களிடம் கூறினுர்.

இந்தியா

# "எங்களுக்கு 2 முறை ஒலிபரப்பு வசதி தருக"

## பிரதம தேர்தல் கமிஷனருக்கு காங்கிரஸ் கோரிக்கை

புதுடில்லி, ஜன. 24

அரசியல் கட்சிகளுக்கான புதிய திட்டம் ஒன்று பற்றி பிரதம தேர்தல்கமிஷனர் திரு சுந்தரம் கட்சித்தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினுர். தேர்தல் ஒலிபரப்பு சம்பந்தமாய் காங்கிரஸ்கட்சியின் ஒரு யோசனை பரிசீலிக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சிக்கு இரண்டு தடவைகள் ஒலிபரப்புக்கு வசதி அளிக்கப்படவேண்டுமெனவும் முதலில் ஒரு தடவையும், பின் இதரகட்சிகளின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் வகையில் மற்ருெரு தடவையும் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டுமெனக் காங்கிரஸ் கோரியிருக்கிறது.

"ஆகாச வாணி" யின் முதலாவது தேர்தல் ஒலிபரப்பு முன் கூறியபடி ஜனவரி 27-ம் திகதி அல்லாமல் சில நாள் கழித்தே ஆரம்பமாகும் எனத் தெரிகிறது.

# "நாட்டின் வீரத் தலைவர் நேதாஜி சுபாஷ் போஸ்"

—நேரு

## நாடெங்கும் 66வது பிறந்ததின கொண்டாட்டங்கள்

புதுடில்லி, ஜன. 24

நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 66வது பிறந்த தினம் நேற்று நாடெங்கும் கொண்டாடப்பட்டது. லுடியானுவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பிரதமர் நேரு பேசுகையில் "நாட்டின் வீரத் தலைவர் நேதாஜி" என வருணித்தார்.

கல்கத்தாவில் நேதாஜி தினம் மிக உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது மாபெரும் ஊர்வலம் ஒன்று அங்கு நடைபெற்றதுடன் இரண்டு பெரிய பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன.

ஜயப்பிரகாஷ் நாராயண் ஒரு கூட்டத்தில் பேசும்போது "நேதாஜியைப்போல் தன்னலங்கருதாத தியாகிகள் இன்னும் பலர் நாட்டில் தோன்ற வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

1938ம் ஆண்டு முதல் 1940ம் ஆண்டுவரை சுபாஷ் சந்திர போஸ் எழுதிய கடிதங்களும் கட்டுரைகளும் அடங்கிய நூல் ஒன்று வெளியிடப்பட்டது.

நாட்டின் இதர பாகங்களிலும் நேதாஜி தினம் கொண்டாடப்பட்டது.

## பிரிட்டிஷ் நடவடிக்கை

லண்டன், ஜன. 24

மேற்குஇரியன் நிலைமை தெளிவாகும் வரை இந்தோனேஷியாவுக்கு ஆயுதங்கள் அனுப்புவதை பிரிட்டன் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் என அறிவிக்கப்பட்டது.

## லக்ஷ்மி மேனன் கோவா சென்ருர்

புதுடில்லி, ஜன. 23

இந்திய உதவி வெளிவிவகார மந்திரி திருமதி லக்ஷ்மி மேனன் கோவாவின் தலைநகரான பஞ்சுமுக்குச் சென்ருர். அங்கு அவர் இரண்டு நாள் தங்கியிருப்பார்.

## "மேலும் துருப்புகள் அனுப்புக"

—யுதாண்ட்

நியூயோர்க், ஜன. 24

காங்கோவிலுள்ள ஐ. நா. படைகளுக்கு மேலும் துருப்புக்களை அனுப்பி உதவுமாறு தலைமைக் காரியதரிசி திரு யுதாண்ட் அங்கத்துவ நாடுகளைக் கேட்டிருக்கிருர்.

## காவலில் கிஸங்கா

லியபோல்ட்வில்லி, ஜன. 23

காங்கோ மத்தியஅரசாங்கத்தின முன்னுள் உதவிப்பிரதமர் திரு. கிஸங்கா இப்பொழுது லியப்போல்ட்வில்லியில் மத்திய அரசாங்கத் துருப்புக்களின் பாதுகாப்பில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

---

## ஒலிம்பிக்கில் 16 ஹாக்கி நாடுகள் மட்டும்

டோக்கியோ, ஜன. 24

உலகில் 40க்கு மேலான ஹாக்கி விளையாட்டு நாடுகள் இருந்தபோதிலும் 1964ம் ஆண்டு டோக்கியோவில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டியில் 16 நாடுகளே பங்குபற்றும் என அறிவிக்கப்படுகிறது.

---

## 2 வருடம் கடும் சிறை

யக்கலை, செவ்வாய்

பத்து வயதுள்ள மேரி அனஸ்திலி என்ற சிறுமியையும் அவளது மைத்துனர் கே. டி. டொன் வில்பிறட் என்பவரையும் வாளினுல் வெட்டிப் படுகாயம் விளைவித்ததாக கிரிண்டிவெல என்ற இடத்தைச் சேர்ந்த கே. சி. அந்தோனி என்ற இளைஞன்மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், கம்பஹா மாஜிஸ்டிரேட் திரு. எஸ்' எஸ். குலத்திலக்கா குற்றவாளியான அந்தோனிக்கு 2 வருட கடுழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

விசாரணையின்போது சிறுமி மேரி பின்வருமாறு தெரிவித்தார்:-

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று இரவு 7 மணி போல அந்தோனி எங்கள் வீட்டுக்கு வந்து எனது மூத்த சகோதரியைக் கூப்பிட்டார். அச்சமயம் சகோதரியின் கணவர் இல்லாததால், அவர் வெளியில் போக மறுத்துவிட்டார். அப்பொழுது அந்தோனி, வீட்டின் கதவைக் காலினுல் உதைத்தார். கதவு திலக்கப்பட்டதைக் கண்ட நான் ஓடிச் சென்று கதவைத் தாளிடச் சென்றேன். அந்தோனி மீண்டும் கதவைத் திறந்துகெண்டு உள்ளே நுழைந்து வாள் ஒன்றினுல் என் தலையில் வெட்டினுர்.

அந்தோனி, வீட்டுக்குப் பின்புறமாகச் சென்று, அந்தச் சிறுமியின் மைத்துனரையும் அந்த வாளினுல் வெட்டினுர்."

### மணி வாக்கு

"சோம்பலைத் தவிர்க்க வேண்டும். விவேகத்தின் நல்லொளியிலே வாழ வேண்டும்."

# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
தை மீ 12உ (25 - 1 - 62)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389


## இனஒதுக்கல் கொள்கை

எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம் என்ற பரந்த நோக்கம் உலகிலே பரவிவரும் இந்நாட்களில் தென்னாபிரிக்காவின் அநாகரிகப் போக்கைக் கண்டு உலகமே வெட்கமும் துக்கமும் அடைகின்றது. தென்னாபிரிக்காவின் இனஒதுக்கல் கொள்கையைப்பற்றித்தான் இங்கு குறிப்பிடுகின்றோம்.

சகோதரத்துவமும் சமத்துவமும் உலகிடை மலர்ந்து வருவதைக் கண்டும் தென்னாபிரிக்கா பழைய பத்தாம்பசலிக் கொள்கைக்குப் புது மெருகு கொடுப்பதென்றால் அந்நாடு இந்த நூற்றாண்டிலும் பிற்போக்கான கொள்கைகளுக்குத் தூபமிட்டுவருகின்றதென்றே கூறவேண்டும்.

இக்கொள்கையினால் ஏற்படக்கூடிய விளைவுகளை அந்நாட்டு மக்கள் அறிந்துகொள்வதற்குத்தானும் வாய்ப்பு அளிக்கப்படவில்லை. தென்னாபிரிக்கப் பார்லிமெண்டில் எதிர்க்கட்சித்தலைவர் இதுசம்பந்தமாகத் தமது எதிர்ப்பைக் காட்டியிருப்பதுடன் அரசாங்கத்தின் இனஒதுக்கல் கொள்கையை வன்மையாகக் கண்டித்துமிருக்கின்றார். இனஒதுக்கல் கொள்கையின் விளைவுகளை மக்களுக்குத் தெரிவிக்க ஓர் அரசாங்கத்துக்குத் துணிச்சல் இல்லையென்றால் அது தவறான ஒரு காரியத்தைச் செய்கின்றதென்றே கூறவேண்டும்.

தென்னாபிரிக்காவின் இனஒதுக்கல் கொள்கைதான் காமன்வெல்த்திலிருந்து அந்நாடு வெளியேறுவதற்கும் காரணமாகும். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திலும் சங்கடமான ஒரு நிலைமை தென்னாபிரிக்காவுக்கு ஏற்பட்டிருக்கின்றதென்றால் அதற்கும் மனிதாபிமானமற்ற இக்கொள்கையே காரணமென்பதை எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துக்காட்டினார். அவர் கருதுவதுபோல இது அந்நாட்டுக்குச் சோதனைமிகுந்த ஒரு காலமாகும்.

தென்னாபிரிக்கா இந்தமாதிரி நடந்துகொள்வதால் உலகின் மதிப்பை இழந்துவருவதுடன் வர்த்தகத்துறையிலும் மிகுந்த நஷ்டத்துக்குள்ளாக வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இந்தியா, சீனா, ரஷ்யா உட்பட பதினைந்து நாடுகள் தென்னாபிரிக்கப் பண்டங்களை புறக்கணித்துவருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலனி ஆதிக்க முறையே இன்று உலகில் ஒழிந்துவரும்போது மனிதப்பண்பற்ற இனஒதுக்கல் கொள்கையைத் தென்னாபிரிக்கா கட்டித் தழுவிக்கொண்டு நிற்பது முற்றிலும் தவறான ஒரு செயலாகும்.

# திருவையாறு தியாகராஜ விழா இன்று ஆரம்பம்

**திருவையாற்றில் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் உற்சவம் அவரது சமாதியில் இன்று ஆரம்பமாகி மூன்று தினங்கள் நடைபெறும். இவ்விழா ஆண்டுதோறும் பகுள பஞ்சமியில் கொண்டாடப்படுகிறது.**

கர்நாடக சங்கீதத்தில் சங்கீத மும்மணிகள் என்று சிறப்புடன் போற்றப்படுகின்ற மூவரில் தியாகராஜ சுவாமிகளும் ஒருவராவர். அவர் ஸ்ரீராமனுடன் இரண்டறக்கலந்த நிலையிலே இந்நாளில் திருவையாற்றங்கரையிலே இசைநாத ஒலியாக காட்சிதருவார். இச்சிறப்பு மிகுந்த நன்னாளில் அப்பெரியாரைப் பற்றிச் சிறிது சிந்தித்தல் சிறப்புடையது.

இறைவனுடைய குணங்களில் ஒன்று நாதப்பிரமம். வேதாந்த சாஸ்திரங்கள் முதலில் அறிய வேண்டியது நாதப்பிரமமே என்று குறிப்பிடுகின்றன. நாதப்பிரமமே சங்கீதமாம். செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் என்றவாறு செவிச்செல்வம் சிறப்புற விளங்கச் சங்கீதமே துணைபுரிகின்றது. இந்தச் சங்கீதத்தில் பரமாசார்யர்களாக இருந்த முன்னையோர்யாவர்? எத்தனை மகான்கள் நாதப் பிரமத்தை உபாசித்துச் சங்கீதத்திற்குத் தொண்டுபுரிந்து நமது கர்நாடக சங்கீதத்தை விருத்தி செய்தவர்கள் என்பதனை கலைஞர்களும் இரஸிகர்களும் நன்குணரவேண்டும். அத்தகையவர்களைப் போற்றுவதின்மூலம் நமது சங்கீத வளர்ச்சியைப் பிறருக்கு எடுத்துக்காட்டமுடியும்.

மேலைநாட்டு இசைக்கு ஜெர்மனி எப்படியோ அதேபோல கர்நாடக சங்கீதத்திற்குத் தஞ்சாவூரைக் குறிப்பிடலாம். சங்கீதமும் மணிகளும் தஞ்சாவூரில் வாழ்ந்தமையினால் ஆங்குச சங்கீதம் வளம் பெறலாயிற்று. முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு வர்ண மெட்டில் பல சாகித்தியங்கள் இருந்தன. அக்காலத்தில் இராகங்களும் வெகுசொற்பமாகவே இருந்தன. ஒவ்வொரு பாட்டும் தனித்தனி வர்ண மெட்டில் அமைக்கவேண்டுமென்ற சிந்தனையையுடைய சங்கீத மும்மணிகளினால் நாதரஸனை அதிகரிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. க்ருதி என்னும் உருப்படிக்கு மூலபுருஷர்களும் இவர்களேயாவர். தக்ஷிண கைலாசம் என்று சொல்லப்படும் பஞ்சநத க்ஷேத்திரமான திருவையாற்றில் ஸ்ரீராமனுடன் இரண்டறக் கலந்த தியாகராஜ சுவாமிகள் பற் பல அற்புதங்கள் நிகழ்த்தியுள்ளார். அவர் தமது வாழ்க்கையில் மூன்று தடவைகள் ஸ்ரீ ராமபிரான் தரிசனத்தைப் பெற்றிருக்கிறார்.

தியாகராஜர் திருவாரூரில் கிரிராஜ கவிமரபில் வந்தவர். இவர் தமது பதினைன்காவது வயதில் கிராமந்தம், அத்தியயனம், காவிய நாடகாலாங்காரம் என்பவற்றிற் பாண்டித்தியமடைந்தார். சமஸ்தான வித்துவான் சொண்டி வெங்கட ரமண ஐயாவிடம் சங்கீதம் கற்கத்தொடங்கி ஒருவருடகாலத்தில் சங்கீத இலக்கணம், ராகாலாபனம், பல்லவி, தாளம் முதலியவற்றில் மிக்கார் எவருமின்றி விளங்கினார்.

ஒரு முதியவரிடம் ஸ்ரீராம நாம மந்திர உபதேசம் பெற்றார். இராமனையே வழிபடு தெய்வமாகக்கொண்டார். முதன்முதலாகக் கனவில் இராமதரிசனம் பெற்ற தியாகராஜர் ஸ்ரீ ராமனைத் துதித்து முதலாவது கீர்த்தனையாக அடாணா ராகத்தில் பாலசனஷமயஎன்றபாடலை இயற்றினார். ராமநின்னே என்பன போன்ற சாகித்யங்களும் ஸ்ரீ ராமன் புகழ்குறித்துஎழுந்தன. தஞ்சை சரபோஜி மகாராஜா தியாகராஜ ஐயரை காண இ[illegible]ந்துஅவரை அழைத்துவரும்படி தூதுவர்களை அனுப்பினர். இவ்வேண்டுகோளைத் தியாகராஜர் மறுக்கவே, தியாகராஜரின் சகோதரர்கள் வெகுண்டு தியாகராஜர் பூசித்துவழிபட்ட திருவுருவத்தைப் பிடுங்கிக் கிணற்றுள் வீசினார்கள்.

கனவில் தியாகராஜருக்குச் ஸ்ரீராமன் கூறியதுபோல தியாகராஜர் சந்நியாசம் பெற்றார். சந்நியாசம்பெற்ற மறுதினம் பலர் முன்னிலையில் 'ஜானகீ காந்தஸ் மரணே' என்ற நாமாவளியை ஆரம்பிக்க இசைவல்லுனர்கள், இரசிகர்கள், ஜய ஜய ராமா. என்றுபக்தியுடன்கோசமிட தியாகராஜர் ஸ்ரீராமனுடன் இரண்டறக் கலந்தார். இவர் சந்நியாசம் வாங்கியபோது பிரமானந்தர் என்று பொருத்தமான பெயரால் அழைக்கப்பட்டார், சந்நியாசம் வாங்கிய இவரைக் கலா ரசிகர்கள் சுவாமிகள் என அழைக்கத் தலைப்பட்டனர்.

இசைச்சுவை, சொற்சுவை, பொருட்சுவை நிரம்பிய சாகித்தியங்களைச் சுவாமிகள் இயற்றியிருக்கிறார்கள். ஸ்வரார்ணவம் என்ற சங்கீத இலக்கண கிரந்தநூலை இறைவன் அருளால் பெற்ற தியாகராஜ சுவாமிகள் அபூர்வராகங்களைச் சங்கீத இலக்கணங்கள் தவறாமல் பக்திமார்க்கம் பெருகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். கர்நாடக சங்கீதம் பிரசித்திபெற திவ்விய நாம கீர்த்தனம், உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனம், பிரகாலத பக்தி விஜயம், நௌகா சரித்திரம் போன்றனவற்றை ஆக்கித்தந்த தியாகராஜசுவாமிகளைப் போற்றுவது சங்கீத வித்துவான்களது கடமையல்லவா?

"மாவை பாரதி நேசன்"

# "சட்டமூலம் சாதி வேற்றுமை அகலாது"

## சனசமூக நிலையத்தில் எம். பி. பேச்சு

சாவகச்சேரி, புதன்

"சாதி வேற்றுமையைச் சட்டமூலம் மாற்றமுடியாது. ஒவ்வொருவரும் தம் இருதயத்தைத் திறந்து சிந்தித்து, இருதயத்தில் சாதி வேற்றுமை கூடாது என்று மனமாற்றஞ் செய்தால் சாதி வேற்றுமை தீரும்"

இவ்வாறு மந்துவில் சரஸ்வதி சனசமூக நிலையப் பன்னிரண்டாவதாண்டு நிறைவு விழாவில் சாவகச்சேரித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு வி. என். நவரத்தினம் கூறினார்.

மேற்படி விழா மந்துவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஆசிரியர் திரு கே. நடராசா தலைமையில் நடைபெற்றது.

திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசும்போது கூறியது: "அரசியலில் நாம முன்னேறிவிட்டாலும் சமுதாய ரீதியில முன்னேற வேண்டும். சென்ற பத்து வருடங்களுக்கு முன் நம் சமுகமிருந்ததுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது பன்மடங்கு முன்னேற்றம் தற்போது காணப்படுகிறது.

நமது சமுகம் அபாயகரமான நிலையிலிருக்கிறது. தற்போது வாழ்பவர் செய்யும் சேவை பிற்காலச் சந்ததியின் சுதந்திரத்துடன் வாழச் செய்யும் அரிய சேவையாகும்."

## படகு மீண்டும் பழுதடைந்தது

நெடுந்தீவுக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையே போக்குவரத்துச் செய்யும் அரசினர் இயந்திரப்படகான "இராசேஸ்வரி" கடந்த பல மாதகால ஓய்வின்பின் மீண்டும் சேவைக்கு வந்தது ஒரு மாதத்திற்குள்ளாக பழையபடி பழுதடைந்து விட்டது.

வருடத்தின் பெரும்பகுதி பழுதடைந்து வேலைசெய்யாது பயன் இன்றிக் கிடக்கும் இப்படகு பற்றி பிரயாணிகள் பெரிது அதிருப்தி அடைந்துள்ளனர். நெடுந்தீவு மக்களின் போக்குவரத்து இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது தினசரி பிரயாணிகள் திண்டாடிய வண்ணம் உள்ளனர்.

## ஐயாறன் எழுதுவது

நேரே மகாபலிபுரம் அரசாங்க யாத்திரிகர் பங்களாவுக்கு வந்து இறங்கினோம். கடற்கரை ஓரத்திலே மிக அழகான ஒரு மச்சுக்கட்டிடம். நவீன ஓட்டல் வசதிகளுடன் நேர்த்தியாக அமைந்துள்ளது. எதிரேசவுக்குத்தோப்பு. அதைத்தாண்டிஅலைகடல்தான். நிலா வெளிச்சத்தில் என்ன அழகு! தமிழ்த்தாய், யாருக்கும் அழகில் குறைந்தவளல்ல என்பதைக் கண்டேன்.

வாசல்முன் தமிழிலும் ஆங்கிலத்திலும், அஸ்திவாரக் கல் முதல்மந்திரி காமராஜ நாடாரால் 1955-ம் வருடம் நாட்டப்பட்டதென்றும், 1957-ல் அவரால் திறக்கப்பட்டதென்றும் சலவைக் கற்களில் பொறித்துள்ளனர். இதில் ஒரு விசேஷம் அஸ்திவாரக கல்லில் "நாடார்" என்று இருந்தது. ஆனால் 1957-ல் திறக்கப்பட்டதை அறிவிக்கும் கல்லில், "நாடார்" என்ற சாதிப்பெயர் இல்லை. தமிழ்நாட்டில் சாதி எண்ணங்கள் படிப்படியாகக் குறைந்துவருவதற்கு இது ஓர் அடையாளமாக இருந்தது.

கால்மணிநேரம் காத்திருந்தோம். பிறகுதான் அறைகள் கிடைத்தன. ஒரு நண்பருடன் 'டபிள் ரூமில்' தங்கினேன். நவீன ஹோட்டல் அறைமாதிரி வசதிகள் எல்லாம் அமைந்து இருந்த அந்த அறைக்கு நாளொன்றுக்கு ரூ. 15 தான் வாடகையாம்.

சிலநாட்களுக்கு முன் அங்கு மலாயா மன்னர் தம்பதிகள் வந்து தங்கியதாக அறிந்தேன். பல பெரிய மனிதர்களும் திடீர் திடீரென வருவதால் அறைகள் கிடைப்பது இங்கும் கஷ்டமாம்.

ஆனால் அறையில் படுக்கை சரிவர இல்லை. கைதுடைக்கும் துணியுமில்லை. கேட்டதற்கு, பலதரம் இக்குறையை டில்லி அரசாங்கத்துக்குத் தெரிவித்தும், இது கவனிக்கப்படவில்லை என்று தெரிந்தது. மேலும் தைப்பொங்கலல்லவா! பணியாட்கள் பலர் 'லீவு' எடுத்துச்சென்றனராம். பிறகு ஒரு விதமாக படுக்கையைச் சரிக்கட்டிக்கொடுத்தனர். இவ்விதவாடிவீடுகள், ராஜ்ய அரசாங்க நிர்வாகத்திலிருந்தால், அல்லது தனிப்பட்டவர்கள் நிர்வாகத்திலிருந்தால் மேலான நிலையிலிருக்குமென்று தோன்றியது.

நல்ல களைப்பு இரவு நல்ல தூக்கம். அதிகாலையில் அங்கு வெந்நீரில் ஸ்நானம்செய்து, கடற்கரை ஓரம் சென்றேன். சிவப்புப்பந்து ஒன்று கடலுக்கு அப்பால் வெகுதூரத்திலிருந்து அழகாகக் கிளம்பிக்கொண்டிருந்தது. சூரிய உதயத்தின் அழகைக்கண்டு, அப்படியே மெய்மறந்துவிட்டேன்.

* * *

பின்னர் மகாபலிபுரம் கோவில்களைப் பார்க்கச் சென்றோம். படத்தில் இவற்றைப் பார்த்திருக்கிறேன். மதுரை, தஞ்சாவூர், திருவண்ணாமலை கோவில் கோபுரங்களைக்கண்ட கண்ணுக்கு இது சாதாரணமாகப்பட்டது. ஏன் இதை இவ்வளவு பிரமாதப்படுத்துகிறார்களென்பது புரியவில்லை.

அன்று நேரே கண்டபோது எல்லாரும்பிரமித்துவிட்டோம். ஒரே கருங்கல்லில், சிற்ப அழகுடனே கோவில் குடையப்பட்டுள்ளது. இப்படிப் பல கோவில்கள். இவை 1300 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டவை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அக்காலத்திலே மக்கள் நாகரிகம் தமிழ்நாட்டில் எவ்வளவு சிறந்து இருந்ததென்பதற்கு அக்கற்களை சான்றுபகர்கின்றன பல கதைகளும் சொல்லுகின்றன. அர்ச்சுனன் தபசு, பகீரதன் கடும்தபம் செய்து கங்கையைக் கொண்டு வந்தது, மகாபலிச்சக்கரவர்த்தி, மகிஷாசுரமர்த்தனி இவர்

(4ம் கலம் பார்க்க)

## ஐயாறன்

(5ம் கலத் தொடர்ச்சி)

களது கதைகளை அக்கற்கள் அன்றுமுதல் சிற்ப அழகுடனே சொல்லிக்கொண்டிருக்கின்றன

புராதன சிவ, விஷ்ணு ஆலயங்கள் அழகான கற்கோபுரங்களுடன் இருக்கின்றன. பட்டைகள் தீட்டிய சலவைக்கல்லாலான ஒரு பெரிய சிவலிங்கம் மூலஸ்தானத்தில் உடைக்கப்பட்டு இருந்தது. பழைய சரித்திரக் கதைகளை அது மௌனமாகச் சொல்லிவந்தது. மற்றக்கோவிலில் படுத்துக்கொண்டிருக்கிறார்மகாவிஷ்ணு. அவருக்காவது பூசை செய்யப்படாதா? என்று கேட்டார் சிங்கள நண்பர். இவருக்கு என்ன பதில் சொல்ல!

* * *

சில கோவில்கள் பாதி கட்டப்பட்டு அப்படியே விடப்பட்டுள்ளன! கற்கள், பெரிய பெரிய யானைகளாகவும், சிங்கங்களாகவும் மாறி, அன்று போல் இன்றுமிருக்கின்றன. அவை எல்லாம் சொல்லாமல் சொல்லும் கதை எவ்வளவோ. தமிழகத்துப் புராதன சிறப்பும், கலைச்செல்வமும் எவ்வளவு என்பதை என்னுடன் வந்த சிங்களத் தோழர்களும் உணர்ந்து பாராட்டினர்.

அவசர அவசரமாகப் பார்த்துவிட்டு பக்கத்திலுள்ள திருக்கழுக்குன்றம்சென்றோம். அங்கு மலை அடியிலே 'பக்தவத்ஸலர்' எனும் ஒரு சிவன்கோவில் உள்ளது. ஒரு சின்ன ஊரிலும் இவ்வளவு பெரிய கோவிலா என்று சிங்களத் தோழர்கள் பிரமித்து ஆச்சரியப்பட்டனர். அவர்கள் ஐவரும் அர்ச்சனைக்கான காளாஞ்சிகளை வாங்கிக்கொண்டு, பயபக்தியுடன் கோவிலுக்குள் வந்து, அர்ச்சனைச் சீட்டுவாங்கி, வழிபட்டதைக்கண்டேன். இந்து மதத்துக்கும் பௌத்தத்துக்கும் உள்ள ஒற்றுமையை உணர்ந்தேன்.

ஆனால் ஓர் அபஸ்வரம். அங்கிருந்த குருக்களுக்கு ஒரு ரூபாய் கொடுத்தோம். ஒவ்வொருவரும் கொடுக்கவேண்டுமென்று இங்கிதமின்றிகேட்டு மானத்தை வாங்கிவிட்டார்! அட கடவுளே!

# சிமெந்து மோசடி பற்றி முன்னைநாள் தொழிலாளி சாட்சியம்

தங்காலை, புதன்

"ஒவ்வொரு 'பாக்கட்' சிமெந்து உபயோகமானபோதும் அதற்குப் பதில் 10 பாக்கட்டுகள் மோசடி செய்யப்பட்டன." இவ்வாறு உப்புக்கார்ப்பரேஷன் விவகாரத்தை விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட கமிட்டிமுன் சாட்சியமளிக்கையில் கார்ப்பரேஷனின் முன்னைநாள் தொழிலாளி ஒருவரான டபிள்யு. சாமி என்பவர் கூறினார்.

அம்பாந்தோட்டை, பந்தலை, பத்ராஜ பகுதிகளில் உப்புக் கார்ப்பரேஷன் தொழிலாற்றிய முறையை ஆராயுமாறும் உப்பு உற்பத்தி வீழ்ச்சிக்கு காரணம் கண்டுபிடிக்குமுகமாகவும் மூவரைக்கொண்ட கமிட்டி நியமிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

அம்பாந்தோட்டையில் பகிரங்கமாகக் கமிட்டி கூடிய போது கமிட்டியின் முன்னர் பலர் சாட்சியம்கூற முன்வந்திருந்தனர். டபிள்யு. டி. சாமி சாட்சியமளிக்கையில் கார்ப்பரேஷனில் தாம் சிலகாலம் வேலைபார்த்து வந்ததாகவும்' கொந்தராத்துக்காரரின்கீழ் தாம் வேலைசெய்து வந்தபோதும் தமக்குரிய சம்பளம் வழங்கப்படவில்லையென்றும் கூறினார்.

ஸ்டோரிலிருந்து சிமெந்து எடுத்துச்சென்ற வண்டிகளிலிருந்து சிமெந்து விற்கப்பட்டதென்றும், காட்டுப்புறத்தில் சிமெந்துப் பாக்கட்டுகள் பதுக்கி வைக்கப்பட்டு அவற்றை லொறிகள் எடுத்துச்சென்றனவென்றும் சாமி கூறினர். இந்த விஷயங்கள் பற்றி தொழிலாளர் அனைவருக்கும் தெரியும் எனவும் சாமி கூறினர்.

கார்ப்பரேஷன் தொழிலாளருக்கும் பந்தலைக் கிராமவாசிகளுக்குமிடையே ஏற்பட்ட சச்சரவொன்றின் காரணமாகத் தாம் வேலையை விட்டுவிட்டதாகவும் சாமி கூறினர். கிராமவாசிகள் வீடுகள் சிலவும் எரிக்கப்பட்டன என்றும் தம் மீது குற்றம் சுமத்தப்படலாம் என்றும் பயத்தால் தாம் வேலையை விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்வு 1962

யாழ்ப்பாணம், புதன்

தமிழ்மறைக் கழகம் ஆண்டுதோறும் நடத்தும் அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்வு 1962 ஜூன் மாதம் மூன்றும் சனிக்கிழமை நடைபெறும் எனவும் 1-3-1962 க்கு முன் தேர்வுக்கு விண்ணப்பங்களை அனுப்பவேண்டுமெனவும் தமிழ்மறைக் கழகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்ட செய்திகளாவன:

ஒவ்வொரு பிரிவிலும் முதல் இடத்தைப் பெறுபவர்களுக்குத் தங்கப்பதக்கமும் இரண்டாம் மூன்றும் நாலாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு வெள்ளிப் பதக்கங்களும் வழங்கப்படும். தொடக்கப் பிரிவுக்குத் தோற்று பவர்களுக்கே 50 சத வீதத்துக்குக் குறையாமற் புள்ளிபெறும் மிகக் குறைந்த வயதுடையவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும் உண்டு. 50 சத வீதத்துக்குக் குறையாமற் புள்ளிபெறும் ஒவ்வொருவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

# உலகவலம் செய்யும் 2 டேனிஷ்காரர்கள் இலங்கையில் சந்தித்தனர்

கொழும்பு, புதன்

திருவாளர்கள் எம், ஜெப்செனும், எப். வெஸ்ரேகாட்டும் டென்மார்க்கைச் சேர்ந்தவர்கள் இருவரும் தங்களது சொந்த நாட்டிலிருந்து சுமார் 40 மைல் தூரத்தில் வசித்துவந்தனர். ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாவிட்டாலும் இருவரின் இலட்சியமும் ஒன்றுகத்தானிருந்துவந்திருக்கிறது.

கால்நடையாக உலகைச் சுற்றிவரும் இவர்கள் இருவரும் இந்தியாவிலுள்ள அமிர்தசரஸ் என்ற இடத்திலுள்ள பொற்கோவிலில் வைத்து முதன்முறையாக சந்தித்தனர். இதைதொடர்ந்து இருவரும் ஒன்றுகச் சேர்ந்து பல நாடுகளையும் சுற்றி வருகின்றனர். திரு. ஜெப்சன் கப்பல் குமாஸ்தாவாகவும் திரு. வெஸ்ரேகாட் புகைப்படப்பிடிப்பாளராகவும் கடமையாற்றினர். பல நாடுகளையும் சுற்றிப் பார்க்கும் இவர்கள் நல்ல ஊதியம் கிடைக்கக்கூடிய எந்தத் தொழிலையும் விரும்பிச் செய்கின்றனர்.

இலங்கையை விரும்பும் இவர்கள் சூடான கறிவகைகளை வெறுக்கின்றனர். இலங்கையிலிருந்து இவர்கள் மலாயா சிங்கப்பூர் அவுஸ்திரேலியா ஆகிய இடங்களுக்குச் செல்வார்கள் என நம்பப்படுகிறது.

# 6 மாதகால பங்கீட்டு புத்தகங்களே வழங்கப்படும்

## அரிசிப் பங்கீட்டு புத்தக மோசடியின் எதிரொலி

கொழும்பு, புதன்

அரிசிப்பங்கீட்டுப புத்தக மோசடிபற்றி விசாரணை செய்வதற்கென நியமிக்கப்பட்ட கமிட்டி தனது அறிக்கையை சமர்ப்பிக்கும்வரை 6 மாத காலங்களுக்கான அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்களே வழங்கப்படும் எனத் தெரிகிறது.

வர்த்தக, உணவுக் கப்பல் அமைச்சின் தற்காலிக அமைச்சர் திரு. டி. எஸ். குணசேகராவின் தலைமையில் விசாரணைக் கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது. விசாரணையின் பின் கமிட்டி சமர்ப்பிக்கும் அறிக்கையை அரசாங்கம் பார்வையிட்டு ஒரு தீர்மானத்துக்கு வரும் வரை 6 மாத காலத்துக்கான அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்களே வழங்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பங்கீட்டுப் புத்தகமோசடி எதுவும் நடக்காத வகையில் ஒரு நிரந்தர முறையான பங்கீட்டரிசிப் புத்தகத் திட்டத்தைத் தாம் உருவாக்கிவருவதாக விசாரணைக் கமிட்டி அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளதாம்.

கமிட்டியின் கோரிக்கையின் பேரில் தற்போதைய பங்கீட்டரிசிப் புத்தக விநியோகத்தைத் தற்காலிகமானதாகக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கமிட்டி விசாரணைகளை ஏற்கெனவே முடித்துள்ளது. அடுத்தமாதம் வரையில் தனது அறிக்கையை சமர்ப்பிக்கும் எனத் தெரிகிறது. கண்டியில் நடைபெற்ற மோசடி பற்றிக் கமிட்டி தனது அறிக்கையில் எடுத்துக் கூறும்.

# அரசாங்க சேவைக்கமிஷன் அதிகாரங்கள்

## நீதியரசர்கள் உபயோகிக்க முடியாது என உத்தரவு

கொழும்பு, செவ்வாய்

அரசாங்கசேவைக் கமிஷனின் கடமை எதையும் நீதியரசர்கள் செய்யமுடியாது என அட்டோர்ணி ஜெனரல் திரு. டக்லஸ் ஜான்ஸே கியூ. ஸி. சட்டம் பிறப்பித்துள்ளார். அரசாங்கசேவைக் கமிஷனின் அதிகாரங்கள் சில நீதியரசர்களுக்கு வழங்கப்பட்டுள்ளனவெனினும் அவற்றை நீதியரசர்கள் உபயோகித்துக்கொள்ளக் கூடாது என அட்டோர்ணி ஜெனரல் சட்டம் பிறப்பித்துள்ளார்.

ஹட்டன் நீதிமன்றத்திலுள்ள லிகிதர் ஒருவர்மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையைத் தொடர்ந்து இப்புதிய சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப லிகிதர் மாவட்ட நீதியரசரால் வேலைநீக்கம் செய்யப்பெற்று கோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டார். அரசாங்க சேவையாளர் ஒருவரை மாவட்ட நீதியரசர் வேலைநீக்கம் செய்யமுடியாது எனவும் அரசாங்க சேவையாளர் எவர்மீதும் குற்றஞ்சாட்ட நீதியரசருக்கு அதிகாரமில்லையென்றும் அப்பேற்பட்டவர் மீது விசாரணை நடாத்துவது அவரது கடமையல்ல என்றும் அட்டோர்ணி ஜெனரல் எடுத்துக்காட்டியுள்ளார்.

அரசாங்க சட்டத்தின்படி நீதியர்சர்கள் அரசாங்க அதிகாரிகளல்ல எனவும் அரசாங்க சேவைக்கமிஷன் நீதியரசருக்கு வழங்கியுள்ள அதிகாரமெதுவும் அரசாங்க சட்ட அடிப்படையில் செல்லுபடியாகாது எனவும் அட்டோர்ணி ஜெனரல் எடுத்துக்காட்டியுள்ளார்.

# மதுபான வடி நிலையம் வேலைகள் ஜூலையில் ஆரம்பம்

கொழும்பு, புதன்

கல்ஓயா ஹிங்குரானவில் உள்ள மதுபான வடி நிலையம் வருகிற ஜூலை தொடக்கமாக கருப்பஞ் சக்கையிலிருந்து மதுபான வடி செயதுவரும்.

பிரஸ்தாப வடி நிலையத்தில் ஒவ்வொன்றும் 1,000 கலன் சக்கை கொள்ளக் கூடிய இரண்டு தாங்கிகள் உள்ளன. ஜின், றம் ஆகிய இருவகை மதுபானங்களும் ஜூலையில் தயாரிக்கப்படும். மலாயாவிலுள்ள கம்பனியொன்றிடம் 500,000 போத்தல்களை வாங்கிக் கொள்வதற்கு இப்பொழுதே ஏற்பாடாகியுள்ளது.

றம் குடிவகை சிவப்புப் போத்தல்களிலும் ஜின் வெள்ளைப் போத்தல்களிலும் அடைக்கப்பட்டு விற்பனையாகும். இரு குடிவகைகளும் போத்தல் ஒன்று 10 ரூபாய் வீதம் விற்கப்படும்.

# யாழ்ப்பாண மாவட்ட உடற்பயிற்சிப் போட்டி

உடுப்பிட்டி, புதன்

இவ்வாண்டு மாவட்ட உடற்பயிற்சிப் போட்டிபொலிஸ மைதானத்தில் நடைபெறும். வட்டாரவீதியில் நடைபெறும் இப்போட்டி, பின்னர் மாவட்ட ரீதியில் நடைபெறும் போட்டியில் முதலாம் இரண்டாம்தரக் கல்லூரிகள் ஒரு பிரிவாகவும் 3ம் தர சுயபாஷாப் பாடசாலைகள் வேறுபிரிவாகவும் பங்குபற்றும். இப் போட்டியில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் தனித்தனிப் பரிசில்கள் வழங்கப்படும்.

இம் போட்டிக்தான விண்ணபபங்கள் 30-1-62 செவ்வாய்க்கிழமைக்கு முன்வட்டார வித்தியாதரிசிகளுக்கு அனுப்பப்படவேண்டும்.

அகில இலங்கை உடற்பயிற்சிப் போட்டி கொழும்பில் நடைபெறுமென வட.பிரதேச உதவி வித்தியாதிபதி தமது சுற்றறிக்கையில் கூறினர்.

# சனசமூகநிலைய நிர்வாகிகள்

பண்ணகம், புதன்

பண்ணகம் வடக்கு, அம்பாள் சனசமூக கி. மு. சங்கப் புதுவருடா உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. இ. சோமசுந்தரம். உபதலைவர் திரு. பொ. சுப்பிரமணியம். செயலாளர் திரு. ஆ. பாலகிருஷ்ணன். துணைச் செயலாளர் திரு. ச. சண்முகலிங்கம் பொருளாளர் திரு. த. கந்தையா. துணைப் பொருளாளர் திரு. சி. பொன்னுத்துரை. மற்றும் ஏழுபேர் கொண்ட நிர்வகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

# தற்கொலை செய்ய முயன்றதாய் வழக்கு

மாவிட்டபுரம், புதன்

சங்கானையைச் சேர்ந்த குணசிறி என்பவர் திராவகம் குடித்து தற்கொலை செய்ய எத்தனித்ததாக குற்றஞ்சாட்டி சுன்னாகம் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரியை 500 ரூபா பிணையில் செல்லும்படியும் அடுத்தமாதம் 20-ந் திகதி கோர்ட்டிற்கு வருமாறும் உத்தரவிட்டார்.

# கிராம சேவக பயிற்சி

கொழும்பு, புதன்

வீடமைப்பு அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியின் ஒரு சுற்றறிக்கையின்படி, கிராமசேவக பயிற்சிக்காலம் மூன்று மாதம் வரை நடைபெறும் எனத்தெரிகிறது. ஒவ்வொரு பயிற்சி நிலையத்துக்கும் ஒரு உயர்தர டி. ஆர். ஓ. பொறுப்பாளராக நியமிக்கப்படுவார். ஒவ்வொரு நிலையத்திலும் சராசரி 50 பேர் இருப்பார்கள் என்றும் 50க்கு மேற்பட்டால் அதிகமான நிலையங்கள் நிறுவப்படலாம் எனவும் தெரியவருகிறது.

# 'விரும்பினல் பாடசாலை அதிபரை என்னல் மாற்றமுடியும்'

## புகார்கள் குறித்து டாக்டர் என்.எம். பேச்சு

எட்டியாந்தோட்டை, புதன்

"எட்டியாந் தோட்டையிலுள்ள பாலிகா வித்தியாலயம் ஒரு அரசாங்கப் பாடசாலை என்பதை அந்தப் பாடசாலையின் அதிபர் மறந்துவிட்டார் போல் தெரிகிறது. இந்தப் பாடசாலையிலிருந்து அவரை நாளைக்குக்கூட வேறுபாடசாலைக்கு என்னல் மாற்றமுடியும்."

பாலிகா வித்தியாலய அதிபருக்கு எதிரான சில குற்றச்சாட்டுகள்குறித்து, மகாவில பாடசாலை பெற்ருேர் ஆசிரியர் சங்க கூட்டமொன்றில் ஆலோசிக்கப்பட்ட பொழுது எட்டியாந்தோட்டை எம். பி. டாக்டர் என். எம். பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

டாக்டர் பெரேரா மேலும் பேசியதாவது: "பாலிகா வித்தியாலயத்தை அரசாங்கம் பொறுப்பேற்கவில்லை எனச் சில பொய்யான வதந்திகள் உலாவின. இதனல் பெற்ருேர் தங்களது குழந்தைகளை இப்பாடசாலைக்கு அனுப்ப வெறுத்தனர். ஆனல் இவையாவும் பொய்யான வதந்திகளே. எட்டியாந்தோட்டையில் மிகப் பெரிய, சகல வசதிகளுடனும் கூடிய பாடசாலையாக பாலிக வித்தியாலயா திகழப்போகிறது. மேற்படிப்புக்கும் இப்பாடசாலையில் வசதி செய்து கொடுக்கப்படும்.

25 வருடங்களுக்குமுன்னர், கிராமப் பள்ளிக்கூடங்களிலிருந்து சுமார் 5 மாணவர்களுக்கு அதிகமாக பல்கலைக்கழகத்தில் படித்திருக்கமாட்டார்கள். ஆனல் இப்பொழுது பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர்களில் 60 சத விகிதமானேர் கிராமப் பள்ளிக்கூட மாணவர்கள் தான்."

# பெற்ருேர்கள் கோரிக்கை

முள்ளியவளை, புதன்

ஆசிகுளம் பாடசாலைக்கு நிரந்தரககட்டடம், தராதரமுள்ள ஆசிரியர்கள், 8-ஆம் வகுப்பு ஆயகின வேண்டுமென அப்பகுதிப் பெற்ருேர், கல்வி அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர். பெற்ருர் ஆசிரியர் சங்கத்தைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

# வற்ருப்பளையில் 21 நாள் பொங்கல்

முள்ளியவளை, புதன்

அஷ்டகிரக சேர்க்கையால் ஏற்படும் தீமைகளைப் போக்குமுகமாக, வற்ருப்பளைக் கண்ணகி கோவிலில், திங்கட்கிழமை தொடக்கம் விசேட பொங்கல் நடைபெற்று வருகிறது. தொடர்ந்து 21 தினங்கள் பொங்கல் நடைபெறும்.

# இ. போ. ச. வின் மீது திறைசேரி அதிகார

## குறைக்குமாறு கமிட்டி சிபார்சு

கொழும்பு, புதன்

இ. போ. ச. மீது திறைசேரிக்கு உள்ள அதிகாரத்தை குறைத்துவிட வேண்டும் என இ. போ. ச. விசாரணைக் கமிட்டி அரசாங்கத்துக்கு சிபார்சு செய்துள்ளது.

இ. போ. ச. நன்ருகத் தொழிற்படுவதற்கு திறைசேரியின் கைப்பிடியிலிருந்து அது விடுபடவேண்டும் என இ. போ. ச. விசாரணைக் கமிட்டி. கூறியுள்ளது. இ. போ. சவிலுள்ள திறைசேரிப் பிரதிநிதி திறைசேரி அடிப்படையில் கட்டுப்பாடுகளை விதிப்பதால் இ. போ. ச, தனது அலுவல்களை விரைவாகச் செய்ய முடிவதில்லை என இ. போ. ச. விசாரணைக் கமிட்டி கருதுகிறது. இது காரணமாகத் திறைசேரிக்கு

# வட்டுக்கோட்டையில் சங்கீத வகுப்பு

வட்டுக்கோட்டை, புதன்

சங்கீதம் பயில விரும்புவோரின் வசதிக்காக வட்டுக்கோட்டை மேற்கு சுப்பிரமணிய வித்தியாசாலையில் சங்கீத வகுப்பு ஒன்று ஆரம்பிக்கப்பெற்றுள்ளதென அறிவிக்கப்படுகிறது.

---

இ போ. ச. மீது உள்ள அதிகாரத்தைக் குறைக்கும்படி விசாரணைக் கமிட்டி அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

## "ஆண்களோடு பெண்களும் சமானமாக உழைத்திடுவோம் வாரீர்"

### மாதர் சங்க திறப்புவிழாவில் உடுப்பிட்டி எ. பி. முழக்கம்

கோப்பாய், செவ்வாய்

"நம்நாட்டுப் பெண்கள் கைத்தொழில், கமத்தொழில்களில் ஆர்வங்காட்ட முனைந்திருப்பது நாட்டின் பொருளாதார விருத்திக்கு சாதகமான நற்பணியாகும். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வது போலவே அத்தொழிலை மேற்கொண்டுள்ள ஆடவர்களையே மணஞ்செய்துகொள்ளவேண்டுமென்ற தீர்மானத்தையும் நம் பெண்கள் மேற்கொண்டு நமது முன்னேற்றத்துக்கான புதிய சகாப்தமொன்றை ஏற்படுத்த வேண்டும்."

இவ்வாறு இருபாலை மாதர் கிராம முன்னேற்ற சங்கத்தின் புதிய கட்டிடத் திறப்புவிழாவில் உரை நிகழ்த்திய உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் குறிப்பிட்டார். இப் புதிய கட்டிடத்தைச் 'கெயர்' ஸ்தாபனத்தைச் சேர்ந்த அதிகாரியான திரு. ஹென்றி செல்ஸ் திறந்து வைத்தார். கோப்பாய் தெற்கு கற்பூர விநாயகர் வீதியில் நடைபெற்ற இத் திறப்புவிழா வைபவத்திற்கு கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம் தலைமை வகித்தார். காரியதரிசி செல்வி கே. சந்திரா தேவி ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

திரு. பாலசுந்தரம் தமது தலைமையுரையில், யாழ்ப்பாணம் அமெரிக்க மிஷனரிமாரின் சிறந்த தொண்டினால் கல்வியில் முதன்மை பெற்றது போலவே, இன்றைய சூழ்நிலையில் தொழில் வளத்தால் சிறப்புற வழி செய்வது பொது ஸ்தாபனங்களின் பணியென்று கூறினார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் பேசியதாவது:

"நமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கான அடித்தளம் பொருளாதார அபிவிருத்தியின் மூலமே செய்யப்பட வேண்டும். ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக நமது தொழில் வளத்தைப் பெருக்குவதில் ஈடுபடவேண்டும். நம் நாட்டின் கைத்தொழில் பலவற்றுக்குத் தேவையான மூலப்பொருள்கள் குவிந்து கிடக்கின்றன. இவற்றையெல்லாம் பிரயோசனப்படுத்தும் வகையில் பல கைத்தொழில்களை ஏற்படுத்தி இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பையும் பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்த வேண்டும். நம் பெண்கள் பல குடிசைக் கைத்தொழில்களை மேற்கொள்ள வேண்டும்."

இசைப்புலவர் சி. செல்லத்துரை மாதர்சங்க வாழ்த்துப்பா பாடினர். காரியதரிசி நன்றி கூறினர்.

## சங்காபிஷேகமும் கிரகசாந்தியும்

முள்ளியவளை, புதன்

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுவரன் ஆலயத்தில், சகஸ்ர சங்காபிஷேகமும், நமக்கிரக சாந்தியும் சிறப்பான முறையில் நடைபெற்றன. தைப்பூசத்தன்று அன்னதானமும் வழங்கப்பட்டது ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனத்துக்கு வந்திருந்தனர்.

## புல்வெளியில் நோயாளர் நித்திரை செய்கின்றனர்

ருகம, செவ்வாய்

ருகம மார்புநோய் ஆஸ்பத்திரியின் 15வது இலக்க வார்ட்டிலுள்ள நோயாளர்கள், வார்ட்டில் இருக்க விருப்பமின்றி வெளியில் நித்திரை செய்கின்றார்கள். வார்ட்டின் சீர்கேடான நிலைமையும், அசுத்தமான படுக்கைகளும், சகிக்க முடியாத துர்நாற்றமும்தான் இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

வார்ட்டிலுள்ள மலசலகூடங்கள் சில காலமாக சுத்தப்படுத்தாததினால், அங்கிருந்துவரும் துர்நாற்றத்தை தங்களால் பொறுக்கமுடியாது என்று அங்குள்ள நோயாளர் முறையிட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக மாவட்ட வைத்திய அதிகாரியிடம் பல தடவைகள் முறையிட்டிருந்தும் இதுவரை பலனேதும் கிட்டவில்லை. சுமார் இரண்டு மாதகாலத்துக்குமுன்னர் ருகம ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்த சுகாதார மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியாவிடம் இதுகுறித்து முறையிட்டும் இதுவரை எந்த விதநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

குறிப்பிட்ட வார்ட்டிலுள்ள நோயாளர்கள், வார்ட்டுக்கு வெளியிலுள்ள விறுந்தையில் முன்னர் நித்திரைசெய்தனர். ஆனால் இப்பொழுது ஆஸ்பத்திரியின் புல்வெளியில் இந்த நோயாளர் நித்திரைசெய்கின்றனர்.

# அரசாங்கம் ரூ. 2 கோடி கடன் கோருகிறது

## நாலேகால் சத வீத வட்டி தரப்படும்

கொழும்பு, புதன்

பதிவு செய்யப்பட்ட மூலதனப் பங்கை வழங்குவதின் மூலம் 2 கோடி ரூபாய் கடனை அரசாங்கம் பெறவிருக்கிறது. இது சம்பந்தமாக மத்திய வங்கி ரூ. 2 கோடி கடன் கோரியுள்ளது. இந்தக் கடன் 1983-ம் ஆண்டு ஜனவரி 31-ம் தேதி திருப்பிக் கொடுக்கப்படும். அரசாங்கத்தின் இவ்வாண்டுச் செலவைச்சரிக்கட்டுவதே இக்கடனின் உத்தேசம். நாலேகால் சத வீதவட்டியுடன் வருடம் இரண்டு முறைகள் வட்டி செலுத்தப்படும். இந்த வட்டிபெப்ரவரி மாதத்தில் ஒரு தடவையும், ஆகஸ்ட் மாதம் ஒரு தடவையும் செலுத்தப்படும்.

வர்த்தக வங்கி, கச்சேரி முதலிய இடங்களில் இக் கடனளிப்பதற்கான விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## கதைப்பூங்கா வெளியீட்டு விழா

கொழும்பு, புதன்

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் பன்னிருவரின் சிறுகதைகளடங்கிய 'கதைப்பூங்கா' என்ற தொகுதியின் வெளியீட்டு விழா தமிழ்ச் சங்க ஆதரவில் வருகிற 28ம் திகதி கலை மண்டபத்தில் நடைபெறும். தொகுப்பாசிரியர்களாக க. குணராஜா க. நவசோதி ஆகியோர் வெளியிட்டுள்ள இத் தொகுப்பு பல்கலைக்கழக வெளியீடு என்னும் புத்தக வெளியீட்டு நிலைய முதல் வெளியீடாக மலருகின்றது.

இவ்விழாவில் ஈழத்தின் தலைசிறந்த சிறுகதை எழுத்தாளர்களும், தமிழ் அறிஞர்களும் கலந்துகொள்வார்கள்.

இதற்கு பல்கலைக்கழக விரிவுரையாளராகிய திரு. க. கைலாசபதி அவர்கள் முன்னுரை அளித்துள்ளார்.

## சீனி உற்பத்தித்தொழில்

கொழும்பு, புதன்

கைத்தொழில் இலாகாவின் கண்காணிப்பில் இருந்துவந்த சீனி உற்பத்தித் தொழில் இப்போது காணி விவசாய நீர்ப்பாசன அமைச்சின் கண்காணிப்பின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

# இந்திய இன்சூரன்ஸ் அதிபர் நாடு திரும்பினர்

## கண்டிக் கிளைக்கு திரு. கோபாலகிருஷ்ணன் பாராட்டு

கொழும்பு, புதன்

இந்திய இன்சூரன்ஸ் தலைவரும் நிபுணருமான திரு. பி. ஏ. கோபாலகிருஷ்ணன் இன்று தாயகம் திரும்பினர்.

அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் இங்கு நல்லமுறையில் ஆரம்பமாகியிருக்கிறதென்றும், எதிர்காலத்தில் அது சியப்பாக இருக்குமென்றும் தெரிவித்தார். இலங்கை இன்சூரன்ஸ் அதிகாரிகளுடன் சம்பாஷித்ததிலிருந்தும் தாம் இங்கு தங்கியிருந்த காலத்தில் அவைகளை அவதானித்ததிலிருந்தும் இந்த உண்மை தமக்குப் பட்டது என அவர் கூறினர்.

கண்டியிலுள்ள கிளை ஸதாபனம் எதிர்பார்த்ததைவிட அதிக பாலிஸிகள் பெற்றிருப்பதாயும் திரு. கோபாலகிருஷ்ணன் கூறினர்.

5 வருடங்களுக்கு முன் இன்சூரன்ஸ் தேசியமயமாக்கப்பட்டது முதல் எதிர்பாராதஅளவு இந்தியாவில் தொழில் பெருக்கம் ஏற்பட்டிருக்கிறதென்றும் கூறிய அவர், பாலிஸிதாரர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட இன்சூரன்ஸ ஸ்தாபனம் அதிக உத்தரவாதமும், உறுதியும் அளிக்கமுடியும் என்ருர்.

## இலவச சமயதீட்சை

யாழ்ப்பாணம், வியாழன்

இரண்டாவது இலவச சமய தீட்சை நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநயகராலயத்தில் பிரமஸ்ரீ ஞானசேகரக் குருக்களால் 21-1-62ல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதுவரை 71 பேருக்கு அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்கத்தின் சார்பாக இங்கு இலவச சமய தீட்சை கொடுக்கப்பட்டதென்று அறிவிக்கபடுகிறது.

பிரம்ம ஸ்ரீ ச. ஞானசேகரக் குருக்கள் யாவருக்கும் சமஸ்கிருத சுலோகங்களைப் பாடி அவற்றிற்கு வியாக்கியானங்களைக் கொடுத்துச் சொற்பொழிவாற்றுகையில் சமய தீட்சை பெற்றவர்களே சைவ சமயிகளென்றும்கூறி சைவ சமய விதிகளை எடுத்துரைத்து அதன்படி யாவரையும் ஒழுகும்படியம் வேண்டி எட்டுக் கிரகங்கள் ஒன்று சேர்வதனல் ஏற்படும் தீமையை நிவிர்த்தி செய்யச் சிவத்தியானமே மார்க்கமென்றும் குறிப்பிட்டார்.


மொணரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

மொணரு அன் ரோஸ் பப்படங்கள் மூவர்ண கலர் லேபிளுடன் மயில் – ரோஸ் அடையாள மிட்டு

MONARA PAPPADAM

ROSE FLOWER BRAND BEST PAPPADAM

REGD. TRADE MARK No 18255

A. M. BUHARI 99, 4th CROSS ST. COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்

ஏ. எம். புகாரி அன் கோ.

99, நாலாம் குறுக்குத் தெரு, கொழும்பு.



யாழ்ப்பாண மக்களுக்கெனப் பிரத்தியேகமாகத் திறக்கப்பட்ட பிடவை ஸ்தாபனம்

"ஹான்ட்லூம்ஸ்"

HANDLOOMS

இந்திய அரசாங்கம்

47, மெயின் வீதி, (பறங்கித் தெரு) யாழ்ப்பாணம்.

WA\HMS1

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

வியாழன் 25-1-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-45 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 கனக செந்திநாதன் — பேச்சு, 7-15 நேயர் விருப்பம், 7-45 டாக்டர் இரஞ்சிதம்—தொடர் நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாமாலை. 9-30 தேர்ந்த இசை, 1-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 நாகர் கோயில் டி. லீலா டி. சரோஜா — பாட்டு, 8-15 தியாகராஜ உற்சவம் — திருவையாறு அஞ்சல்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 நாகர் கோயில், டி. லீலா டி. சரோஜா—பாட்டு. 1-30 வீணை, 1-50 குரல் இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு, 3-00 தியாகராஜா உற்சவம்—திருவையாறு அஞ்சல்.

மாலை 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 தியாகராஜ உற்சவம் — திருவையாறு அஞ்சல், 8-30 டெல்லி அஞ்சல், 9-15 சுபத்த சங்கீதம், 9-30 தேசீய கவி சம்மேளனம், 11-00 தியாகராஜ உற்சவம் — திருவையாறு அஞ்சல்.

-----

## ஏழைமாணவருக்கு இலவச புத்தகங்கள்

### பட்டினசபை உதவி

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறைப் பட்டின சபையின் எல்லைக்குள் இருக்கும் காங்கேசன்துறை நடேஸ்வரக்கல்லூரி, அமெரிக்கன் மிஷன் பாடசாலை, றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, மயிலிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலை, றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, தையிட்டி கணேச வித்தியாசாலை, சிவகுருநாத வித்தியாசாலை, வீமன்காமம் ஆங்கில பாடசாலை ஆகிய எட்டு பாடசாலைகளிலும் கல்விபயிலும் ஏழாம் வகுப்புக்குட்படட ஏழை மாணவர்களுக்கு பட்டினசங்கம் 1100 ரூபா செலவில் புதிய புத்தகங்களை வாங்கி இலவசமாக வழங்கியுள்ளது.

---

## பிரசவ சாலையில் நாய்களின் தொல்லை

உடுப்பிட்டி, புதன்

கரவெட்டி மேற்கு அம்பம் பிரவச சாலையில் நாய்களின் தொல்லை தாங்கமுடியவில்லை. சில வேளைகளில் நஞ்சுக்கொடியும் நாய்களால் இழுத்துச் செல்லப்படுவதாயும், இரவு நேரங்களில் நாய்கள் ஊளையிடும் ஓலத்தில் நோயாளர் நிம்மதியாகத் தூங்கமுடியாதிருப்தாயும், கூறப்படுகிறது.

இவ்விஷயம் கட்டை வேலிக் கிராமச்சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

## கி. ச. உபதலைவர் தேர்தல்

முள்ளியவளை, செவ்வாய்

முள்ளியவளைக் கிராமசபையின் உபதலைவராக ஜனாப் அபூபக்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு 6 வாக்குகளும் அவருடன் போட்டியிட்ட திரு. மனுவேல்பிள்ளைக்கு 3 வாககுகளும் கிடைத்தன.

இத்தேர்தல், கி. ச. அலுவலகத்தில், தலைவர் திரு. வெ. அண்ணமலை தலைமையின் கீழ் நடைபெற்றது.

-----

## முத்தமிழ்ச் சங்கம்

திருக்கோணமலை, செவ்வாய்

இந்துக்கல்லூரி மண்டபத்தில் முத்தமிழ்ச்சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்:பண்டிதர் திரு. ஐ. சரவணமுத்து,செயலாளர்:திரு. கனகதாமோதரன், பொருளாளர்: திரு.பெ. கனகநாதபிள்ளை.

## அஷ்ட கிரக சேர்க்கைக்கு வழிபாடு

பண்ணுகம், புதன்

பண்ணுகம் வடக்கு அம்பாள் சனசமூக இந்து இளைஞர் சபையினர் பணிப்புலம் மகாமாரி ஆலயத்தில் பொங்கற்தினம் தொடக்கம் கோளறு பதிகம் பாராயணஞ் செய்து வருகிறார்கள். வரும் 26-1-62 தேதிமுதல் பத்து நாட்களுக்கு வீடுகள்தோறும் சென்று கோளறு பதிகம் பாடுவதற்கு ஆவன செய்துவருகின்றனர்.

## உசனில் தெப்பத் திருவிழா

கொடிகாமம், செவ்வாய்

உசன் கந்தசுவாமி கோவிலில் தைப்பூசத் திருநாளன்று கோவில் முன்பாக அமைக்கப்பட்டிருக்கின்ற திருக்கேணியில் தெப்பத்திருவிழா மிக விமரிசையாக நடைபெற்றது.

---

## சூரியன் ஆற்றில் விவசாயத் திட்டம்

முள்ளியவளை, செவ்வாய்

கொக்கிளாய்-கொக்குத்தொடுவாயிலுள்ள படித்த வாலிபருக்கென ஒரு விவசாயத் திட்டத்தைச் சூரியன் ஆறு என்னுமிடத்தில் தொடங்குவதற்கு, வவனியா அரசாங்க அதிபர் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

## கிறீன்பீல் கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாண உதைபந்தாட்ட கழகத்தாரால் அண்மையில் யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் நடாத்தப்பட்ட போட்டியில் கிறீன்பீல் கோஷ்டியும், யொலிஸ் ஸ்ரார் கோஷ்டியும் கலந்து கொண்டது. இப்போட்டியில் கிறீன்பீல் கோஷ்டி 4 கோல்களைப் போட்டு யொலிஸ் ஸ்ரார் கோஸ்டியைத் தோற்கடித்தது.

---

முள்ளியவளை, புதன்

ஊற்றங்கரைப் பிள்ளையார் கோவிலில், தைப்பூச விழா வெகு விமரிசையாக நடைபெற்றது. அயற் கிராமங்களிலிருந்தும் அனேக பக்தர்கள் வந்திருந்தனர். புதிதுண்ணும் வைபமும் நடைபெற்றது.


நான் விரும்புவது

நெஸ்டோ மோல்ட்

அது எனக்கு எவ்வளவோ நன்மையளிக்கின்றது...





நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம் ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

நெஸில்ஸ்

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரொடக்ஸ் (சிலோன்) லிமிட்டெட்
த. பெ 189,
கொழும்பு.

குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானாலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானாலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்றால், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமால்ட்

விட்டமின் B அடங்கியது.

# கலை அரங்கம்

## காந்திஜி பற்றி பிரிட்டிஷ் படம்: கோட்ஸே பாத்திரம் பற்றி சர்ச்சை!

காந்திஜி கொலையுண்டது சம்பந்தமாக "ராமனுக்கு 9 மணி நேரம்" என்ற பெயரில் இப்பொழுது தயாராகிவரும் பிரிட்டிஷ் படத்தைப் பற்றி ஒரு சர்ச்சை கிளம்பியிருக்கிறது.

வசூல் நோக்கத்துடன் இந்த காந்தி படம் தயாரிக்கப்படுவதாக லண்டன் "டெயிலி ஹெரால்டு" (தொழிற் கட்சிப் பத்திரிகை) பத்திரிகையின் விமர்சகர் கூறுகிறார்.

இப்படத்திற்கான சில காட்சிகள் சமீபத்தில் டில்லியில் படமாக்கப்பட்டன. இதற்கு வசதிகள் செய்து கொடுத்த ஒரு இந்திய சர்க்கார் அதிகாரி பின்வருமாறு கூறியதாக "டெயிலி ஹெரால்டு" விமர்சகர் தெரிவித்துள்ளார்:-

"மகாத்மா காந்தியைப்பற்றி சித்தரிக்கையில் படம் அவருடைய உணர்ச்சியை உண்மையில் பிரதிபலிப்பதாய் இருக்கிறது. ஆனல் கோட்ஸேயைப் பற்றிய பகுதிகளில் ஹாலிவுட் கட்டுக்கதை மாதிரிக் கேலிக்கூத்தாயிருக்கிறது. கோட்ஸேயை பிரிட்டிஷார் ராணுவத்தில் சேர்த்துக் கொள்ள மறுத்ததுதான் அவன் கொலைகாரன் ஆனதற்கு ஒரு காரணம் என்பது போல் இப்படக்காரர்கள் கற்பனை செய்திருக்கிறார்கள். காந்திஜி கொலையுண்டு மாளப் போகிறார் என்ற ஸோஸ்யத்தை நம்பி எங்கள் பொலீஸ்காரர்கள் நடந்து கொண்டது போல் தோன்றும்படி திரைக்கதை அமைந்திருக்கிறது. எங்கள் பொலீஸாரை இப்படி நகைப்பிற்குள்ளாக்குவதை நாங்கள் ஆட்சேபிக்கிறோம். இதை மாற்றிவிட்டால் பிறகு வேண்டிய வசதிகளை செய்து தருவதற்கு ஆட்சேபணையில்லை" என்று இந்திய சர்க்கார் அதிகாரி கூறினுராம்.

படத்தில் உண்மையும் கற்பனையும் சேர்ந்திருப்பதுதான் சரி என்று தயாரிப்பாளர் ராப்ஸன் வாதிக்கிறார். "ராஜீய ரீதியில் இப்படம் சரியானது. அஹிம்சைதான் படத்தின் மையக்கருத்து. அதை சுவாரஸ்யமாகச் செய்வதற்காகத்தான் கற்பனை நகாசு. மேலும் இது மகாத்மா காந்தியின் வாழ்க்கைச் சரிதம் அல்ல; கடைசி 9 மணி நேரத்தில் சுற்றியிருந்தவர்களின் மனோநிலையைச் சித்தரிப்பதேயாகும். இதில் கோட்சேயை ஒரு வீரனுக்கிவிடும் அபாயமும் இருக்கலாம். ஆனல் இது ஒரு இலக்கியம், ரோமாபுரி சக்ரவர்த்தி ஸீஸரை அவரது நெருங்கிய நண்பர் புருட்டஸ் ஏன் கொன்றார் என்பதை "ஜூலியஸ் ஸீஸர்" நாடகத்தில் ஷேக்ஸ்பியர் அனுதாபத்துடன் சித்தரிக்கவில்லையா? கோட்ஸேயை மகாத்மாகாந்தி எப்படி நடத்தியிருப்பாரோ அப்படியே தான் நாங்களும் செய்திருக்கிறோம்" என்று படத்தயாரிப்பாளர் ராப்ஸன் கூறுகிறார்.

### தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன் சிவாஜிகணேசன் - ஜெமினி கணேசன் நடித்த பாச மலர்

யாழ்ப்பாணம் மனோகரா கே. ஆர். ராமசாமி - சாவித்திரி நடித்த செல்லப்பிள்ளை

சாவகச்சேரி தேவேந்திரா: சிவாஜி கணேசன், பி. சரோஜா தேவி நடித்த விடிவெள்ளி.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை) லக்ஷ்மி (இரத்தினபுரி) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கெலியா) தீபொளி (நுவரெலியா) ஜெமினி (ராகலை)

★ உண்மை இலட்சியம்!
★ அன்புத் தியாகம்!!
★ உணர்ச்சி ஏக்கம்!!!

மூன்று உணர்ச்சிப் பின்னல்களில் உருவான இலக்கியப் படைப்பு!



சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். என். ராஜம், தங்கவேலு, எம். சரோஜா, எம். என். நம்பியார்

நடித்த

பாச மலர்

திரைக் கதை - டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

மனோகரா (யாழ்ப்பாணம்)

கே. ஆர். ராமசாமி சாவித்திரி

நடித்த

செல்லப்பிள்ளை

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### எம். ஜி. ஆரின் தந்தை ராதா தாயாக ராஜகுமாரி

ஆர். ஆர். பிக்சர்ஸ் தயாரித்துவரும் சமூகப்படத்தில் எம். ஜி. ஆரின் தந்தையாக எம். ஆர். ராதாவும், டி. ஆர். ராஜகுமாரி தாயாகவும் நடித்து வருகின்றனர். டி. ஆர். ராமண்ணா டைரக்ஷனில் உருவாகும் இப்படம் சுமார் 5000 அடிகள் வளர்ந்துள்ளது.

### "தென்றல் வீசும்"

தெலுங்கு-கன்னட நட்சத்திரமான கிருஷ்ண குமாரி சௌகார் ஜானகியின் (சகோதரி) தமிழ்த் திரையுலகில் பிரவேசிக்கிறார். விக்ரம் புரடொக்ஷன்ஸ "தென்றல் வீசும்" என்ற சமூகப்படத்தில் கல்யாண் குமாரியின் ஜோடியாக இவர் நடிப்பார். எம். ஆர். ராதா, ராமராவ், கருணாநிதி ஆகியோரும் இப்படத்தில் நடிப்பார்கள்.

### இவ்வாண்டு எம். ஜி. ஆர். படம் 10 வெளியாகலாம்

1962-ல் தான் நடிக்கும்படங்கள் எட்டு அல்லது பத்து வெளிவருமென்று எம். ஜி. ராமச்சந்திரன் கருத்துத் தெரிவித்தார். இப்படங்கள் முடியும் தறுவாயில் உள்ளன. வேகமாக வளரும் படங்களும் சேர்த்து மேற்கூறியவரை தொடர்ந்து தன்படங்கள் வெளிவருவதை தான் விரும்புவதாகவும் அவர் அறிவித்தார்.

### சாரங்கபாணியின் மகள் வடநாடு பயணம்

பிரபல நகைச்சுவை நடிகர் திரு. கே. சாரங்கபாணியின் மகள் விஜயலட்சுமி வட இந்தியாவில் தனது நடனநிகழ்ச்சிகளை நிகழ்த்தச் செல்கிறார். கல்கத்தா, ஒரிசாவிலுள்ள கட்டாக் ஆகிய இடங்களில் அவரது பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெறும்.

### பேய் காற்றிலும் கத்தி வீச்சு

விரைந்து வீசிய பேய்க் காற்றிலும் ஆனந்தனும் அசோகனும் பயங்கரமாக வாட்போர் செய்தனர். இடியையும் மின்னலையும் கூட அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஏவி. எம். மில் வளரும் முருகன் பிரதர்ஸ் 'பகைவனுக்கருள்வாய்' படத்திற்காக அண்மையில் இக்காட்சி படமாக்கப்பட்டது.

## சினிமா ரசிகர் தொகை அதிகரிக்கிறது

இந்தியாவில் படம் பார்ப்போர் தொகை 1961 ல் முந்தின வருஷத்தை விட சுமார் 15 சத விகிதம் அதிகரித்திருக்கிறதாம். பம்பாயிலுள்ள தியேட்டர்காரர்கள் சங்கம் நாடெங்குமுள்ள வசூல்களின் பேரில் இந்தப் பூர்வாங்க மதிப்பீட்டை வெளியிட்டிருக்கிறது.

நல்ல படங்களுக்கு நிறைய வசூலாகியிருக்கிறது. கிராமப் புறங்களிலுள்ள தியேட்டர்களை விட நகர தியேட்டர்களில் நிறைய வசூலாகியிருப்பதாக இந்த மதிப்பீடு கூறுகிறது.

### எம். ஜி. ஆர். படத்தில் புது நடிகை

எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் அடுத்து தயாரிக்க உள்ள 'மீனவ நண்பன்' என்ற படத்தில் இரண்டு முக்கியப் பெண் பாத்திரங்கள் உண்டு. இவற்றில் ஒன்றில் சரோஜாதேவி நடிக்கலாம். மற்றொரு பாத்திரத்திற்கு புதுமுகம் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

## 'திருவள்ளுவர்' திரைப்படம்; படப்பிடிப்பு ஆரம்பம்

### வள்ளுவராக புதுமுகம்

உலகத் திருமறையால் திருக்குறளை அளித்த 'திருவள்ளுவர்' சரிதத்தை ஈஸ்ட்மன்கலரில் திரைப்படமாக்க மெசர்ஸ மாடர்ன்சினிடோன் திரைப்பட நிறுவனத்தார் முடிவு செய்திருந்தனர் அல்லவா? இதன் துவக்க விழா 17-ந் திகதி காலை நியூடோன் ஸ்டுடியோவில் சிறப்புற நடைபெற்றது. நீதிபதி (ஹானரரி பிரசிடென்ட் மாஜிஸ்டிரேட்) திரு. கே. ஆர். தாஸ விழாவைத் துவக்கி வைத்தார். இப்படத்தின் திரைக்கதை, வசனம், பாடல்கள் இவற்றை எழுதும் திரு. சரவணபவானந்தா, நிறுவனத்தினர் சார்பில் வரவேற்புரை நிகழ்த்தினர். படத்தின் டைரக்டரானஜெமினிஎஸ.எஸ. நாதன் காமிராவை முடுக்கி வைத்தார். இவரே இப்படத்தின் ஒளிப்பதிவாளருமாவார்.

புதுமுகம் நாகராஜன் கதாநாயகனை (திருவள்ளுவர்) நடிக்கிறார். மற்றும் இப்படத்தில் அநேகமாக புதுமுகங்களே நடிப்பர் என்று தெரிகிறது. வள்ளுவரைப்பற்றி முரண்பட்ட வரலாறுகள் பல கூறப்படுவதால் நன்கு ஆராய்ந்து இப்படம் எடுக்கப்படுவதாக கூறப்படுகிறது.

திரு. எஸ. ராஜரத்தினம் இப்படத்தை தயாரிக்கிறார்.

### 19 நட்சத்திரங்கள் நடிக்கும் படம்

எப். ஸனூச் தயாரித்துவரும் 'தலாங்கொஸ்ட் டே' என்ற படத்தில் நடிப்பதற்காக ஓ, பிரியென்டேனியல் செலின் என்ற பிரஞ்சு நடிகர் ஆகிய இருவரும் புதிதாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களையும் சேர்ந்து இப்போது அந்தப்படத்தில 19 நட்சத்திரங்கள் நடித்துவருகின்றனர். இரண்டாவது உலக மகாயுத்தத்தைப் பின்னனியாக வைத்து எடுக்கப்படும் இப்படம் ஒரு பிரமாண்டமான தயாரிப்பாகும்.

### சாவித்திரியின் சொந்தப்படம்!

துர்க்கா பிலிம்ஸ் என்ற பெயரில் சாவித்திரியின் தந்தை சௌத்ரி ஆரம்பித்துள்ள படக்கம்பனியின் முதல் சமூகப்படத்திற்கான படப்பிடிப்பு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இப்படத்திற்கான கதை, வசனம் இறைமுடிமணி எழுதுவார் என்று தெரிகிறது. சாவித்திரி-ஜெமினிகணேஷ் பிரதம பாகத்தில் நடிக்கும் இப்படத்தை ஏ. பீம்சிங் டைரகட் செய்வார்.

### அமெரிக்க செயற்கை கிரகம் வானவெளிக்கு செல்லவில்லை

கேப்கனவரால், ஜன. 24

600 மைல் உயரத்தில் பூமியைவலம் வருவதற்கென ஐந்து செயற்கைக் கிரகங்களை வானவெளிக்கு அனுப்புவதற்கு அமெரிக்க விஞ்ஞானிகள் செய்த முயற்சி இன்று தோல்வியடைந்தது. செயற்கைக்கிரகம்வைத்து அனுப்பட்ட ரொக்கட்டின் இரண்டாவது படிவம் இயங்காததினால் அது அனுப்பப்பட்ட 25 நிமிஷங்களில் அது அத்திலாந்திக் சமுத்திரத்தில் விழுந்தது.

### நடன ஆசிரியை நடன டைரக்டர் ஆகிவிட்டார்

ஆண்களே நடன டைரக்ட் செய்துவரும் படவுலகில் அசோகா பிக்சர்ஸார் நடன ஆசிரியை கே. ஜே. சரோஜாவை நடன டைரக்டராக்கிவிட்டார்கள். இவர் டைரக்ட் செய்த நடனமொன்றை சமீபத்தில் இந்திராவின் செல்வத்திற்காக படமாக்கினர்கள். சூர்யா, மீனா என்ற இரண்டு பெண்கள் ஆடினர்கள்.

ராதா, அசோகன், பண்டரிபாய் முதலியோர் நடித்து வரும் இந்தப் படத்தை பத்மனாபன் டைரக்ட் செய்து வருகிறார்.

### டில்லியில் அரபு உப ஜனதிபதி

புதுடில்லி, ஜன- 24

ஐக்கிய அரபுக் குடியரசு உதவி ஜனதிபதி பீல்ட் மார்ஷல் அப்துல் ஹக்கீம் அமெர் இன்று புதுடில்லி வந்துசேர்ந்தார். அவரை உபஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், பிரபிரதமர் நேரு மற்றும் பலரும் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

### உழைக்கும் பத்திரிகையாளர் தங்கப்பதக்கம் பரிசுபெறுவர்

கொழும்பு, புதன்

இலங்கையிலுள்ள உழைக்கும் பத்திரிகையாளர்களில் சிறந்தபத்திரிகையாளருக்குதங்கப்பதக்கம பரிசளிப்பதென்று இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

எழுத்துத் துறையில் ஒருவருக்கும் படப்பிடித் துறையில் ஒருவருக்குமாகவருஷாவருஷம் இரண்டு தங்கப் பதக்கங்கள் வழங்குவதென்று சங்கம் தீர்மானித்துள்ளது.